உ




சாதுபாலானந்த
சுவாமிகள்

# குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள்

தொகுப்பாசிரியர்
கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள்

தொகுப்பாசிரியர் :


கலாபூசணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



முஜிக வாகன மோதகஸ்த
சாமன கர்ண விளம்பிய சூஸ்திர
வாமன ரூப மகேஸ்வர புத்திர
விக்கின விநாயக பாத நமஸ்தே

## துதி

எல்லார்க்கும் நல்லவரம் மருள்கின்ற ஈஸ்பரனே
சொல்லறத் தமிழுக்கு துணை நிற்கவா - முன்னவனே
பலகாலும் உன்நாமம் மறவாது உளம்வைத்தேன்
குலதெய்வ பாடற்கு குஞ்சரன் முன்னிற்கவே

# குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள்

தொகுப்பாசிரியர் :

**கலாபூசணம் நாகமணி விநாயகமூர்த்தி**

சேனைக்குடியிருப்பு
10.09.2016

இரண்டாம் பதிப்பு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பதிப்புத் தகவல்


| | | |
|---|---|---|
| படைப்பு | – | குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் |
| படைப்பின் தன்மை | – | சமய இலக்கியம் |
| பதிப்புரிமை | – | படைப்பாசிரியர்க்கு |
| பக்கங்கள் | – | 80 அனுபந்தம் 04 |
| அளவு | – | 1/8 |
| அச்சுப் பதிப்பு | – | கோல்டன் ஒப்செற் அச்சகம் மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| அட்டைப்படம் | – | கோல்டன் |
| பிரதிகள் | – | 1000 |
| விலை | – | ரூபா. 500 |
| வெளியீட்டு இலக்கம் | – | 07 |
| வெளியீடு | – | ஈஸ்வரி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வரம்புகள் | பக்கம் |
|---|---|
| வினாயகர் துதி | 01 |
| பிள்ளையார் அகவல் | 02 |
| மாரியம்மன் வழிபாடல் | 05 |
| பராசக்தி அகவல் | 10 |
| மாரியம்மன் காவியம் | 14 |
| சர்வ சக்தி அகவல் | 20 |
| ஆதி பராசக்தியின் அன்புத் திருமாலை | 22 |
| சேனையூர் சிவமுத்துமாரி சிறப்பு காவியம் | 29 |
| சிவமுத்து மாரியம்மன் சிறப்புக் கும்மி | 35 |
| வைரவர் துதி | 38 |
| வைரவர் காவியம் | 44 |
| நாகதம்பிரான் பிரார்த்தனைக் காவியம் | 48 |
| பேச்சியம்மன் துதி | 53 |
| பேச்சியம்மன் காவியம் | 56 |
| பத்திரகாளி அகவல் | 58 |
| காளியம்மன் காவியம் | 59 |
| கண்ணகையம்மன் பிரார்த்தனை | 64 |
| கண்ணகையம்மன் அகவல் | 68 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படையல்


தாயே இம்மகனைத் தாங்கிச் சுமந்து பெற்று
ஆய்ந்து நல் அறிவூட்டி அமுதளித்து – சீராட்டி
சேயேனைச் செந்தமிழ்ச் சிற்சபையில் ஏற்றிவைத்த
அம்மை அப்ப வானவர்க்கு அடியேன் சமர்ப்பணமே.

பக்தி பெருக பராசக்தி புகழோங்க
நித்தம் என்மனதில் நிறைந்திருக்கும் – என் பெற்றோர்
நீத்தார் நாகமணி நின் மூத்த பிள்ளையற்கு – பக்தி
ரசத்தால் தொகுத்த பாமாலை காணிக்கையே.

– அன்பு மகன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருளுரை

குருநாதர் துணை பொங்கி அருள

இந்த பிரபஞ்சம் தோன்றிய ஆதி காலத்திலே மனிதன் ஆதிவாசியாக வாழ்ந்த காலத்தில், சில ஆசரீரி வார்த்தைகளாலும், சில அதிசயத்தோற்றங்களையும் கண்டு பயந்து, சில தினங்களில் அதன் மூலம் சில பலன்களை அனுபவித்து அவர்களின் பயம் தெளிந்துவர, அதனைத் தங்கள் தெய்வமாக ஏற்று அதற்கு சில பல சடங்குகள், விழாக்கள், படையல்கள், செய்து வழிபட்டனர். இந்த வழிபாடு அநேகமாக பௌர்ணமி நாளில் கொண்டாடினர்.

மனிதன் தன் சொந்த அனுபவத்தில் சில பல கலைகளை கற்று தன் அறிவை வளர்த்து வந்த காலத்தில் அவர்கள் கொண்டாடும் உருவத்தை தங்கள் குலதெய்வமாக கொண்டாடி வந்தனர்.

மனிதன் அறிவு வளர வளர அவர்கள் வாழ்க்கையில் முன்னேறி அவர்கள் பூஜை முறைகளையும், திருத்தி காலத்திற்கு ஏற்றார்போல் மாற்றி அமைத்தனர். அந்த வழியில் உருவானது தான் குலதெய்வம் எனப்படும் பரம்பொருள், எப்படி வீட்டில் முதிய மூத்தவரிடம் நாம் எதையும் கேட்டுச் செய்கிறோமோ அதேபோல் நம் குடும்பத்தில் நிகழும் நல்ல, கெட்ட காரியங்களையும் நம் குலதெய்வத்திடம் அர்ப்பணித்து செய்துவந்தனர் நம் முன்னோர்கள். ஆனால் இன்று விஞ்ஞானம் வளர்ந்து மனிதன் பல சாதனைகளை செய்து வருகிறான். அவர்கள் தங்கள் குல தெய்வத்தை மறந்துவிட்டனர் எனலாம். இதன் விளைவாகத்தான். இன்று மக்கள் எல்லா வசதிகளும் இருந்தும் நிம்மதி என்ற பெரிய பொக்கிஷத்தை இழந்து அவதிப்படுகின்றனர்.


இந்த காலகட்டத்தில் நம் திருவாளர் நா. வினாயகமூர்த்தி அவர்கள் நமக்கு எல்லோர்க்கும் குலதெய்வத்தின் முக்கியத்தையும், அதன் சக்தியையும் விளங்கும் பொருட்டு இந்த நூலை வடிவமைத்து நமக்கு அருளியது அந்த பரம் பொருள் (குலதெய்வமே) இவர் வடிவில் செய்ததாக நினைத்து இதை எல்லோரும் படித்து வாழ்க்கையில் பரம் பொருளின் அருளாசியைப் பெற்று நல்வாழ்க்கை வாழ வாழ்த்துகிறேன். திருவாளர் புலவர் வினாயகமூர்த்திக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் அருளி, அன்னார் மேலும், மேலும் பல அரிய நூல்களை வெளியிடப் பரம்பொருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

திருப்புகழ் ஆசிரமம்
வள்ளிமலை, இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



சேனையூர் புலவர் திரு. நாகமணி விநாயகமூர்த்தி அவர்களின், குலதெய்வப் பிரார்த்தனைப் பாடல்கள் என்ற இந்த நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் அகமகிழ்வடைகிறேன்.

**"ஆரியர் போற்றும் அணிசார் இலங்கையிலே**
**சீரார் குணதிசை சேர்ந்து வளர் புகழும்,**
**ஏரார் இயன்ற செந்நெல், தீங் கன்னலொடு**
**தெங்கிள நீரும் தீம்பலவி னள்ளமிர்தும்**
**எங்கும் விளங்கும் குலதெய்வ நலனும்..."**

எனத் தொடரும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின், வரிகளுக்கொப்ப ஒவ்வொரு பிரதேசத்தின் பண்பாட்டுக் கோலங்களும், அவ்வப்பிரதேச பௌதீக புவியியல் அமைப்பு. மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் வரலாற்றுப் பின்னணி, தொழில்கள், சம்பிரதாய நடைமுறைகள் என்பவற்றுக்கேற்பவே அமைந்துள்ளன.

இந்த வகையில், செந்நெறித் தமிழர் வாழ்கின்ற சகல நிலங்களிலும் கோயில்கள் அமைத்து காணப்பட்டாலும், இக்கோயில் வழிபாட்டுக்குப் புறம்பாக, வீடுகளில் குலதெய்வங்களை ஆதரித்து வழிப்பட்டுவரும் பாரம்பரியம், பண்டுதொட்டு நிலவி வருவதைக் காணலாம்.

இந்த குலதெய்வ வழிபாடுகளில், அம்மன் வழிபாடும், வைரவர் வழிபாடும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. அத்தோடு குடிபதிகளின் குலமுறைக்கேற்ப மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன், கண்ணகியம்மன், காத்தவராயன் வீரபத்திரர், ஆதி வைரவர், சுடலை வைரவர், நரசிங்க வைரவர், வதனமார், நாகதம்பிரான், வீரபத்திரர் ஆகிய தெய்வங்களும் வழிபடும் கடவுளராகக் கொள்ளப்படுகின்றன.

குலதெய்வ வழிபாடு மேற்கொள்ளப்படும் இல்லங்களில், வருடத்துக்கு ஒருமுறையாவது இஷ்ட தெய்வங்களை நினைவுகூர்ந்து சர்க்கரைப் பொங்கலிட்டு, சந்தன, குங்கும சாம்பிராணி, குங்கிலியம் வாசம் பொங்க தூபதீபமெடுத்து, வேப்பிலை, தாமரைப்பூ, கமுகம்பாளை, கரும்பு இளநீர், வெற்றிலை பாக்கு, சூடம், கிங்குவகை, மொந்த வாழைக்கனி, மடைப்பரப்பி, உடுக்கை, சங்கு, அம்மன் சிலம்பு, மணியொலியெழுப்பி, காவியம்பாடி, கலைஆடி, வழிபட்டு நல் வாங்குப் பெற்றுக்கொள்வார்கள்.

பின் இரவு முற்றத்தில் கொக்கட்டித்தடி நட்டு, குருத்தோலை பந்தலிட்டு, தென்னம்பாளை சாற்றி, குருவிக் குருத்தால் அலங்கரித்து இளநீர், ரொட்டி, மஞ்சள் ரொட்டி, மொந்தன் பழம், மது கரும்பு, கருங்காலிப்பொல்லு வைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கை ஒலியெழுப்பி வைரவக் கடவுளை அகவல்பாடி அழைத்து காவியங்கள் பாடிக் களிப்பூட்டி, மங்களம்பாடி மகிழ்ந்து வழிபட்டு நிறைவு பெறும், வழிபாட்டு முறையாகவும் இது காணப்படுகிறது.

இக்குலதெய்வ வழிபாட்டுக்காக தமது குடும்பத்தினரும் உற்றார் உறவினரும் ஒன்றிணைந்து வழிபாடியியற்றுவதன் மூலம், குடும்பத்தினரிடையே ஒரு பரஸ்பர ஒற்றுமை ஏற்படுவதோடு வீடு வாசல்களில், துஷ்ட தேவதைகள், வாசம் செய்யாது விலகிவிடும் என்பதும், நோய், பிணி, பில்லி, சூனியம், ஏவல் அணுகாது என்பதும் சகல சித்தியும் சௌபாக்கியமும் நிறையும் என்பதும் இக்குலதெய்வ வழிபாட்டின் தாற்பரியமாகக் கூறப்படுகிறது.

சமகாலத்திலே, சைவத் தமிழர் மத்தியில் அழிந்துவரும் பாரம்பரியங்களில் இக்குலதெய்வ வழிபாடும் அருகி வருவதையும், இக்குலதெய்வ வழிபாட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள், மறந்துபோகக்கூடிய ஒரு அபாயகரத் தன்மையையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த வேளையிலே புலவர் திரு. நா. வினாயகமூர்த்தியவர்கள், இப்பாடல்களை ஆவணப்படுத்தும் பணியில் இறங்கியிருப்பது பலராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாகும்.

இவர் ஒரு புலவர் மட்டுமல்ல, சிறந்த பூசகராகவும் காணப்படுகிறார். சிறுவயது முதல் அன்னை மகமாரியைத் குலதெய்வமாகக் கொண்டதால் தன்னை மகமாரித் ஆட்கொண்டு சிவத்தொண்டனாக மிளிர்கிறார்.


இவர் தேடித்திரட்டி, தொகுத்து வழங்கும் இப்பாடல்களுள் சில பாடல்களை தாமாகவே இயற்றி இசைநயத்தோடு பாடக்கூடியதாக இங்கே தந்துள்ளார். குறிப்பாக ஆதிபராசக்தியின் அன்புத்திருமாலை என்ற பகுதியிலே அகரவரிசையில், அட்சுரசுத்தியோடு பாடியின்புறக்கூடிய வகையில், சிவமாரி யருளால் மாரியைப் பொழிந்துள்ளார். என்பது குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

குலதெய்வ வழிபாட்டில் நாட்டமுடைய அனைவரது வீட்டிலும் இருக்கவேண்டிய ஒரு பொக்கிஷமான இந்த நூலை அனைவரும் வாங்கி அவர் ஆக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும். இது போன்று பல நூல்களை ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுத்தியோரம் ஆண்டு முதல் இருந்து அன்னார் வெளியிட்டு வருகிறார். இவரின் முயற்சிகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருத்தணியில் உதித்தருளமொருத்தன் மலை விருத்தான்
எனதுளத்துறை கருத்தன் மயில் நடத்து குகன் வேலே.

**பரதன் கந்தசாமி, எம்.ஏ. (அணஸ்) எம்.பில்.**
பணிப்பாளர், நால்வர் கோட்டம், கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

பெரியோர்களே!

அன்னை ஆதிபராசக்திகள் வயிரவர் நாகதம்பிராய னாகிய குலதெய்வங்களைத் துதித்துப்போற்றி வழிபடும் பாரம்பரியம் எமது சைவ உலகுக்கு ஒன்றாகும். இத்தெய்வ வழிபாட்டின் கிழக்கிலங்கை பேர்பெற்று விளங்குவதைக் காணலாம். ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் அங்கு ஒரு சக்தி கோயில் இருப்பதும் அத்தாய்க்கு வருடம் ஒருமுறை ஆலயக் கதவு திறந்து பூசை செய்வதும் முடிவில் வயிரவர் பூசையுடன் சடங்கு நிறைவுபெறும்.

இவ்விதம் வீடுகளிலும் அம்மன் சிலையை கலசமாடி வாசனாதிகள் பூசி திருநீறு சாற்றி மஞ்சள் குங்குமப்பொட்டிட்டு வேப்பம் குழைப்பிடியில் வைத்து கும்பத்தில் கமுகம் பாளையுடன் நிறுத்தி சிலம்பு பொற்பிரம்பு அம்மானைக் காய் முறுக்குச் செம்பு (தெய்வமாடும் செம்பு) சாட்டைக் கயிறு என்பன மடையில் வைத்து தூபதீபம் காட்டி பொங்கலிட்டு பாணக்கம் துள்ளுமா பலகார வகைகளும் படைத்து தேங்காய் வெட்டி வைத்து அங்கு வயதுவராதோரான பெண் குழந்தைகளை அம்மைபோல் சேலை கட்டி முக்காடு இட்டு கையில் வேப்பம் குழைகொடுத்து வெள்ளை விரித்து இருத்தாட்டி இவர்களின் முந்தானையில் பொங்கல் படைத்து கற்பூரதூபம் காட்டி பூசகர் பூசை செய்கின்ற நேரம் அம்மன் வந்து அருள்வாக்குக் கூறி பூசை ஒப்புவித்து நிறைவு பெற்ற பின் வயிரவர் பூசை ஆரம்பமாகும்.

இப்பூசை முற்சாமத்தில் பண்டுதொட்டு இன்றும் இங்கு நடைபெறுவதைக் காணலாம். வீட்டு முன் பந்தல் போட்டு தென்னங்குருத்தால் சோடனை பண்ணி வேப்பிலைதூக்கி தென்னம்பாளை சூலம் சாற்றி இளநீர் மொந்தன் பழம் பாக்கு வெற்றிலை றொட்டி கிழங்கு வகைகள் வைத்து குங்கிலிய தூபதீபம் காட்டி அகவல் காவியம் பாடி வருடாவருடம் இப்பூசை செய்து வருவதனால் எங்கள் மனைவளவுகளில் துஷ்ட தேவதைகள் அணுகாமலும், நோய் இடர் பிணிகள் வாராமலும் தடுத்து எதிர்க்கும் சக்தி இந்த ஆதிவயிர சுவாமிக்கு ஆற்றல் உண்டு.

நம்பினவர்க்கு நற்கதி அருள் பவளும் உண்டென்றவர்க்கு ஒளி கொடுப்பவள் இத்தாய் எனலாம். இந்த அம்மன் வயிரவர் பூசை செய்கின்ற பூசகர்கள் பெரும்பாலும் அருகி வருவதாலும், இப்பாடல் விதிமுறைகள் தெரியாமலும் எமது கிராம விழுமியங்களும் கலாசார பாரம்பரியங்களும் எதிர்காலத்தில் மறைந்துபோக இடமுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அன்பர்களே!

பிள்ளையார், மாரி அம்மன், பேச்சம்மன், காளித்தாய், கண்ணகைத்தாய், வயிரவசுவாமி, நாகதம்பிரான் ஆகியோர்க்குரிய பாடல்களை ஒன்றாகத் தொகுத்தும் அடியேனால் ஆக்கப்பெற்ற மகாபராசக்தி அகவல் மாரியம்மன் காவியம் பாமாலை கும்மிப்பாடல்களும் இதில் இடம்பெறுகின்றன.

உசாத்துணை நூலாக இறவாப் புகழோடு சிவபதமடைந்த கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் திவ்விய காரணியில் சிதைந்த மலர் இதழில் இருந்து மேல் குறிப்பிட்ட தெய்வங்களின் காவியம் பிரார்த்தனை என்பதனைத் தந்துதவிய திரு. கணபதிப்பிள்ளை நல்லையா (சிவாயநம) அடியார் அவர்கட்கும் சிறுபராயத்தில் அடியேனுக்கு பிள்ளையார் வயிரவர் அகவல்களை ஊக்குவித்துப் படிப்பித்த எனது சிறிய தந்தை வீரமுனை வீரச்சோலையில் குடிபதியாய் வாழ்ந்து (12-04-2001) அன்று மோட்சமடைந்த ஆண்டிப்பிள்ளை கந்தையா பூசாரியார் என்பவரையும் அவரின் அம்மன் பத்ததியிலுள்ள பூசை ஒப்புவிக்கும் மந்திரங்களையும் சரணங்களையும் இடம்பெற வைத்து அன்னவரையும் அடியேன் நினைந்து கொண்டும்,

மற்றும் இப்புத்தகத்துக்கான அருளுரை வழங்கிய என் குருநாதர் தவத்திரு சுவாமி பாலாநந்தா அவர்கள் தாழ் வணங்கிக்கொண்டு இத்தொகுப்புக்கு பலகாலும் ஊக்குவித்து ஆலோசனைகளையும் அணிந்துரைகளையும் தந்துதவிய தம்பி பரதன் கந்தசாமி நால்வர் கோட்ட பணிப்பாளர் அவர்களும், சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு. க. கனகரெட்ணம், தம்பி குருக்கள் நல்லதம்பி ஐயா அவர்களையும் இப்பாடல்களைப்பாடுகின்ற தங்களுக்கும் உலகெங்கும் வாழுகின்ற சைவப் பெரியோர் இல்லங்களிலும் இந்த மாரியம்மன் மற்றும் சக்திகளுடன் வயிரவர் சுவாமியின் பாடல்கள் ஒலித்து ஓசை பெறவும் மாதாவை வணங்கிக் கொள்கின்றேன்.

அடியார்களே இந்த சிவமுத்துமாரியம்மன் தாலாட்டை ஏனைய தெய்வங்களுக்கும் மாற்றிப் பல மெட்டு இசை நயத்தோடு பாடியும் தெய்வங்களை மகிழ்விக்கலாம் எனக்கூறி இப்புத்தகத்தில் ஏதும் சொல் குற்றம் பிழைகள் இருப்பின் அடியேனை மன்னித்தருள் வேண்டித் தங்களின் ஊக்கமே இத்தொகுப்பு எனக்கூறி அனைவருக்கும் அன்னையின் அருள் என்றும் கிடைக்க வேண்டி தாயின் தாழ் சரணடைகின்றேன்.

வணக்கம்

இவ்வண்ணம்,
புலவன், ஈஸ்பரி மூர்த்தி

சேனைக்குடியிருப்பு
14-04-2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

செந்தமிழர் வாழ்கின்ற சென்னல் எனும் ஊராம் சேனைக்குடியிருப்பில் சிறப்புற வந்துதித்த திருத்தொண்டர் நா. வினாயகமூர்த்தி அவர்களின் ஆக்கபூர்வ சிந்தனையை முயற்சியை பாராட்டாமல் இருக்க முடியாது. சிறுவயது முதல் திருத்தொண்டனாகி அன்று முதல் இன்று வரை பிள்ளையார் முருகன் மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன், வைரவ சுவாமி என்ற குலதெய்வங்களை விசுவாசித்து பூசித்து வரும் ஓர் அடியாரென்பது உண்மையாகும்.

தான் மறைந்தாலும் தமது சைவ மக்கள் இக்குலதெய்வ வழிபாடுகளையும் தெய்வ நற்சிந்தனைகளையும் கிரிகைகளையும் பின் தொடர்ந்து சிறப்பிக்க வேண்டுமென நல்லெண்ணப் பணியை மேற்கொண்டு வருகிறார். குலதெய்வப் பிரார்த்தனைப் பாடல்கள் என்ற இந்த நூலை சுயமுயற்சியோடும் தன்னால் இயற்றிய பாடல்களையும் தொகுத்து உருவாக்கிச் சமர்ப்பிக்கும் இச்சோதரர்க்கு எமது ஆசியோடும் இறை ஆசி நிறைவாக கிடைக்க இந்துக்கள் அனைவரும் பிரார்த்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

முற்றிலும் இந்துக்கள் வாழ்ந்த முற்கால இக்காலத்துக்குக் காலம் குலதெய்வ வழிபாடுகளை பரம்பரையாக பூசகர்கள் நடத்தி வந்தாலும் இவை வளர்ச்சி பெறாதுமருகிப் போவதை அறிந்து தனது அர்ப்பனத்தில் மீண்டும் மெருகூட்டி வளர்க்கக்கூடிய முறையில் மக்கள் பணியையும் மகேசன் பணியையும் ஒருங்கிணைத்து முற்கொண்டுவரும் இந்த வேளையில் சகலரது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இதற்கு வழங்கி இந்து மத எழுச்சியும் அதன் வளர்ச்சியும் முன்னோக்கி செல்லவேண்டுமென்று எனது இந்த சிறு ஆசியுரையை வழங்குகிறேன். இவரோடு இணைந்து இன்னும் பலர் இப்படி இறைசேவைப்பாதையில் நல்லவழி காட்டினால் இந்துமத விருத்தி இயல்பாகவே வளரும்.

எல்லோரும் வாழ்க! இறைபதம் ஓங்குக!!

**கந்தையா கனகரெட்னம்**


அகில இலங்கை சமாதான நீதிபதி,

சர்வோதய மாவட்ட இணைப்பாளர்,

வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஆனைமுகனே அரனார் திருமகனே
கானமதம் பாயு மொருகையோனே – ஞானமுற
வித்தைகற்கும் பிள்ளை கட்கும் விக்கினங் கள்வராது
நித்தம் நித்தம் நீ துணையாய் நில்.

## சரஷ்வதி துதி

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டெம்மை
சரியா சனம் வைத்த தாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிள்ளையார் அகவல்

திருச்சிற்றம்பலம்

ஓம் அரிபிரமன் தேடரிய அம்பலவன் திருமகனே
கடியவினை நீத்தருளும் கணபதியை நாள்தோறும்
விடியமுதல் எழுந்திருந்து வேழமுகவினாயகனைப்
புதிய மலர் பறித்து பூவினுடன் நீர்தெளித்து
அடிபணிந்து நமஸ்கரித்து அன்பினுடன் அனுமான்றன்
பெரியவன்றன் திருமகனே பிள்ளையே கணபதியே
மாயவன்றன் மருகோனே வல்வினைகள் தீர்ப்பவனே
ஆங்காரமெல்லாம் அவனிடத்தில் சேர்ப்பவனே
சாங்காரம் கைக் கொண்டு தன்னிடத்தில் நிற்பவனே.
பொழுதொரு நாள் மறவாத புண்ணியனை நினைந்து கொண்டு
காதலித்து நெஞ்சுருகிக் கண்களெல்லாம் கழி கூர்ந்து
சிவனருளைச் சேர்ந்துகொண்டு,
கற்பகமாய் வந்தெமக்கு கருத்தை எல்லாம் தருபவனே
மெய்ப்பொருளாய்வந்தெமக்கு வினைகள் தீத்தருபவனே
தனி வழிக்குத் துணையான தண்டைக் கால் அழகியனே
பெருவயிறுக் கணபதியைப் பிள்ளையான் மறப்பதில்லை.
கயிலை பொழி திருமுகமும் கமலத்துவர் வாயும்
நின்றிலங்கிய நீறும் நீறுலங்கிய நெற்றியும்
குண்டலமும் குழகாதும் கூடியதோர் கொம்பிரண்டும்
அண்டரெல்லாம் வந்திங்கு அடிதொழவே.
அஞ்சாதே என்று பெருஞ்
செம்பொன்னினால் அமைத்த சீருடைய பூநூலும்
மன்னனெனும்மது வுறுண்டை அழகிய தோர் செவ்வாயும்
எங்களிட கண்முன் எழுந்தருள வேணும் சுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

விண்ணவர்க்கு விண்ணவனே வேதியர்க்கு வேதியனே
உன்னரிய பெரும் புகழால் உகந்திருக்கும் ஐங்கரனே
வேலுகந்த முருகனுடன் விண்ணுலகம் சூழவந்து
ஈசுரனை வலமாக வந்து
அரனொடியில் பழம்வாங்கி ஆரமாய் அமுது செய்யும்
ஆனை முகத்தைங்கனே
புலியுரித்தி மளூவேந்தும் புரிசடையோன் புரியணிந்து
வளூவரக்கன்தனை வதைத்து
மலர்மகளை இடம் தரித்து
நந்திஉயிர் பேர்த்து சதுர்முகனைத் தலையரிந்து
பெலியுகந்து பிட்டுக்காகப் பெருங்கூட மண் சுமந்து
மாறன் கை அடிபட்டு வேடனெச்சி திண்டு
மேனி எல்லாம் நீறணிந்து
நெடுஞ்சுடலை தன்னில் ஆடிப் பார்த்தன் கை அடிபட்டு
பரிவாய் எருக்கம்பூமாலை கோர்த்து
சிரல் அணிந்தவன்றன் சாலை எனும் கணபதியே
கற்பகமே மான் பயின்ற புனக் குறவர்
வளர்த்தெடுத்த மொழிமாதைத் தேடி
ஆண்டி என வந்து அமுதரிந்து நீர்குடித்து
மீண்டும் அவளூடனே மின்களெல்லாம் தோள்பணிந்து
ஆனதொரு மரமாகி அருவேடன் வடிவு கொண்டு
அண்டுகந்து வள்ளிதனை அறுமுகனார் அணைவதற்கு
சென்று நின்று உனை நினைக்க சீக்கிரத்தில் ஓடி வந்து
கந்தனுக்கு உதவிசெய்யும் காரணனே கரிமுகனே
ஆயிலையில் அமர்ந்த அக்கினியை முனியை எரிசெய்து
பஞ்சவர்க்குத்தூதாகிப் பார்த்தனுக்கு தேரூந்து
அஞ்சவே தேத்தரசன் அவனுயிரைக் கொல்லுவித்து
சிலைமிகுந்த விதுரன்கை சிலை தனை முறுப்பித்து
மதமிகுந்த கும்பகர்ணன் மாழவொரு கணைதொடுத்து
காளி என்றன் சென்னியிலே கருதி நடம்புரிந்து
சிங்கமுருவாச் சின்னமாய்ச் சங்கேந்தும் மாயன் மருகோனே
ஜெகமுழுவதும் மெஞ்ஞான மூவாறுகருணையும்
தந்தருளூம் சொற்போன தெய்வேந்திரா
உன் அருளைப் பாடலுற்றேன்
முற்பயின்றவினை தீர்க்கும் முன்னவனே பெரியவனே
அற்புதமாய் வந்தெம்மை ஆளூம் ஆனைமுகத்தைங்கரனே
உன்பாதம் நமஸ்தே நமஸ்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

ஓம் அரியச் சரத்தில் அமர்ந்திடும் சோதி
கரியென வந்தெனைக் காத்திடும் சோதி
மாமறக் கண்ணென வருமகா கணபதி
தாமரைக் கண்ணொளி தங்கிய கணபதி
திருபுரமெரிக்க சிவன் பெறுதரிசனை
வருமாட்சரத்தில் பம்பரமானவா
எஞ்சாட்சரத்தில் ஏளையற்கிரங்குவாய்
தெள்ளிய வேடர் தினைப் புனம்தன்னில்
வள்ளியை வேலர்க்கு மனைவியாய்ச் சேர்த்தவா
குறுமுனிமண்டலம் குறுகிய புன்னை
அழவுறு கொடியதாய் அளவினில் வழர்த்தவா
ராவணன் கொண்டு வரும் லிங்கம் தன்னைத்
தாவென வாங்கித் தரைதனில் வைத்தவா
அரனுமைவலமாய் வந்தரிய மாங்கனியை
விரைவுடன் வாங்கிய வேழமாமுகவா
சடைதனில் இருக்கும் சந்திரன் தனக்கு
அடைவுடன் சாபம் அருளிய கரிமுகா
ஒரு கையில் பாசம் ஒரு கையில் மோதகம்
ஒரு கையில் விளாங்கனி
ஒரு கையில் அங்குசம் ஒரு கையில் அப்பம்
ஐந்து கரத்திலும் அன்புடன் எடுத்து
அடியவர் வினையை அகற்றிடும்சோதி
அன்பர் களிடும் பூசையை இன்பமாய் உகந்து
ஈரேழு லோகமும் எங்குமாய் நின்றதோர்
எலியாகிய பிஞ்சகா சரணம்
எம் வறுமை எம் பிணிகள் உமைக் கண்டோட
எங்களுக்கருள்புரிகுவாய் ஏகவினாஜகா
ஆதிஒழிவானவா எங்களுக்கருள்புரிகுவாய்.
என்ன பிழை செய்தாலும்,
உன்னையே துதி செய்தோம்
எப்பொழுதும் உன் கிருபை தா
ஓவதூர் பாரிவளர் பூசை செய்
துன்புகள் நம்பினோம். கடரகரிமுகவரதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் வழிபாடல்

திருச்சிற்றம்பலம்

ஆதி பராபரியே அயனுடைய தங்கையரே
நாதமறை ஓங்கார நற்பொருளாய் நின்ற சக்தி
தக்கன் மகளாகத் தானுதித்தாள் வீரசக்தி
மிக்கசிவ னாரிடத்தில் வீற்றிருந்தா ளாதிசக்தி
பின்னும் மலையரசன் பிள்ளையென வந்துதித்தாள்
அன்னநடை மாதுமையாள் அருகிருந்தா ளரனிடத்தில்
சக்தியென வேதான் தாபரிக்க வேநினைந்தாள்
உருண்ட சடையழகி உருத்திராட்ச மார்பழகி
ஆதிசிவ னாரிடத்தில் ஆறுமுகனைப் பெற்றெடுத்தாள்
தில்லை வனத்தே திருநடன மாடையிலே
மார்மேலே நாகம் மடிமேற் புரண்டாடத்
தோள்மேலே நாகம் துடைமேற் புரண்டாட
வல்லதொரு பேச்சியென வந்துநட மாடிநின்றாள்
பத்திர காளியெனப் பார்பதியா ளுற்பவித்து
ஈசன் நினைக்க எழுந்தருளி வந்து நின்றாள்
வற்றவே யக்கடலை வாரிக்குடித்து நின்றாள்
வாதாடி நின்றதொரு வல்லபுக ழெங்களம்மை
பார்தழைக்க வேணுமென்று பத்தினியா ளெங்களம்மை
சிந்தித்த நற்றவசு செய்வதென்று தாநினைத்தாள்
கன்னனூர் வாழுகின்ற காரண சவுந்தரியே
புகழ்முத்து மாரியரே பூலோக நாயகியே
ஆதியபி ராமியெனும் ஆனந்த ரூபியரே
மாயவனார் தங்கையரே மனோன்மணி தேவியரே
எங்கள் வினைதீர்ப்பாய் ஈசுபரித் தாயாரே
ஒன்பது கொடிசக்தி யுண்டாக்க வேநினைந்தாய்
சக்தி யொருசக்தி சமயம் பதினாறாம்
பத்தினியார் தான்நினைக்கப் பலமுகமாய்த் தான்பிறந்தார்
கும்பத்து மாரியென்றுங் கோவிந்தன் தங்கையென்றும்
ஏழுபேர் மாரியென்றும் ஏகபரா சக்தியென்றும்
ஆழிமால் தங்கையென்றும் ஆச்சிகா மாட்சியென்றும்
மதுரை மீனாட்சியென்றும் வல்லபத்திர காளியென்றும்
துர்க்கையபி ராமியென்றுஞ் சொல்லரிய பேச்சியென்றும்
கண்மணியில் வந்துதித்த கண்ணகை யம்மையென்றும்
பரமனுமை யருளாள் பாருலகிலே யுதித்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியிலே வந்துதித்தாள் மெய்ப்பொருளாம் மாரியம்மன்
மாரியென் னுமாரி மகமாரி ஆதிசக்தி
நண்ணுந் தவம்புரிய நாரணியுந் தானினைத்தாள்
வண்ண மிகுவடவை யக்கினியை யுண்டுபண்ணி
வடவைக் கடல்தனிலே வாய்த்தகும்பந் தானிறுத்திக்
கும்பத்தின் மேலே குணமாய்த் தவமிருந்தாள்
பரமன் தனைநினைத்து பார்பதியாள் மாரியம்மன்
அரிய தவமாக அம்மையவள் வீற்றிருந்தாள்
வீற்றிருந் தாளம்மை வெகுநாள்த் தவமாக
அம்மன் தவப்பெருமை கண்டுபர மேஸ்வரனும்
செம்மை யுடனம்மன் திருமுகத்தைத் தான் பார்த்து
என்னவரம் வேணுமுனக் கீஸ்பரியே கேளுமென்றார்
அப்போது பார்வதியும் அன்பாய் மனமகிழ்ந்து
இப்பெரிய முத்துவகை எனக்கருள வேணுமென்றாள்
பாராம லேயெனக்குப் பதினெட்டு முத்துவகை
தரவேணு மென்றுரைத்தாள் தாயாரு மப்பொழுது
அரனும் மனமகிழ்ந்து ஆனதொரு முத்துவகை
பரமேஸ் பரிதனக்குப் பண்பாக வேகொடுத்தார்
பொற்கரகம் பொற்பிரம்பு பொற்சிலம்பு வெணீறு
வேப்பந் திருக்குழையும் மெய்யுடுக்கும் வேணுமென்றாள்
கேட்டவர மெல்லாங் கிருபையுட னேகொடுத்தார்
அப்போது மாரியம்மன் அன்பாய் மனமகிழ்ந்து
இப்பெரிய முத்தருமை யானறிய வேணுமென்று
ஆதிசிவன் மேனிதனில் அம்மையவள் தானெறிந்தாள்
கறைக்கண்டன் மேனிதனிற் கனகமுத்துத் தான்பரந்து
வருத்தம் மிகவாகி வன்னெருப்பாய் நின்றெரியப்
பொறுக்க அரிதெனவே போதமுட னாதிசிவன்
மதனை யெரித்தோன் மகாமேர்வை வில்வளைத்தோன்
ஈரேழு லோகமெல்லாம் மீடேற்று மாதிசிவன்
நீறுபூ சிச்சுடலை நின்றாடும் ஆதிசிவன்
வேலவனை ஐங்கரனை மேம்மையுடன் பெற்றபிரான்
சால மனந்தளர்ந்து தான்பொறுக்க மாட்டாமல்
அம்மைதனை மனதில் அன்பாக வேநினைந்தார்
மாரிசிவ பார்வதியை மனதிலே தானினைந்தார்
அந்த நினைவுதன்னை அம்மையவள் தானறிந்து
சிந்தை மகிழ்ந்து செல்வியென்னு மெங்களம்மை
பரம சிவன்வருத்தம் பண்புடனே மாற்றவென்று
செய்யதிரு நீறுகொண்டு சிவனார்தன் மேனிதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தெறிந்த அக்கினியை முதன்மைபெற வாங்கிநின்றாள்
மதியணிந் தோனுடலின் வருத்தமது தீரவென்று
அதிக புகழுடைய அரன்மனதி லேநினைந்து
பார்பதியார் தன்முகத்தைப் பார்த்தேது செப்பலுற்றார்.
விறுமாவை விட்டுணுவை வேதமதை யாகமத்தைச்
சந்திரரைச் சூரியரைத் தானவரை வானவரை
இந்திரரைத் தேவர்களை ஈரே முலகமதை
உண்டாக்கி யெல்லா வுயிருக்குயிராய் நின்ற என்மேல்
பாராம லேஎறிந்தாய் பட்டமுத்துச் செய்வருத்தம்
பொறுக்கவரி தாகையினால் பூவுலகி லுள்ளவர்கள்
தங்களுக்கு இந்த முத்துத் தானெறிய லாகாதது
பாலருகி லெந்தனுக்காய்ப் பார்பதியே யிப்போது
உன்னை நினைந்தவர்க்கும் ஓதுதமிழ் வாணருக்கும்
புகழரிய முத்தெறியப் போகாதே பொற்கொடியே
வேலவனை ஐங்கரனை மேவுதிரு மாயவரைப்
பார்பதியே யுந்தனையும் பண்புடனே எந்தனையும்
ஓதுவோர் பூசைசெய்வோர் உறுதருமஞ் செய்திடுவோர்
தங்களுக்கு இந்தமுத்தைத் தானெறிய லாகாது
வயது முதிர்ந்தோர்கள் மாதவத்தோர் தங்களுக்கும்
இந்தமுத்தைத் தானெறிய லாகாது கண்டீரே
ஆகமுறுங்கிழவிஆனவர்க்கும் பாலகர்க்குத்
மதிசேர் கதிநிறைந்த மங்கையர்க்கு மிப்போது
அதிகவித முத்தெறிய லாகாது பொற்கொடியே
சதிகேடர் ஏழைகட்கும் அநியாயஞ் செய்தவர்க்கும்
சிவபூஜை குருபூஜை செய்யநினை யாதவர்க்கும்
சத்திய மாயிதனைத் தான்செய்யாப் பாவிகட்கும்
பத்திமுத்தி யில்லாத பாவிகட்கும் தீயவர்க்கும்
தானதரு மஞ்செய்யாச் சண்டாளர் துர்ச்சனர்க்கும்
பொல்லாத முத்துக்களைப்போயெறிநீ பொற்கொடியே
அக்கினிக் கம்பமதில் அதிகதவம் செய்ததினால்
முத்துவகை பெற்றாய் மும்மூர்த்தி தேவரெல்லாம்
பார்பதியே யுன்றனையும் பரமேஸ்பரன்றனையும்
நாரணி துர்க்கையென்றும் நல்லமுத்துமாரியென்றும்
பேச்சிக்கா மாட்சியென்றும் பேர்பெரிய மாரியென்றும்
மதுரைமீ னாட்சியென்றும் வல்லபத்ர காளியென்றும்
உரியதொரு பேருரைத்தா ருத்தமியே யுந்தனுக்குக்
கன்னனூர் மாரியம்மன் கம்பநதி யுன்னூராம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பங் குழைபிடிப்பாய் வெண்கமலம் வீற்றிருப்பாய்
முத்தளக் கும்மாரி முதல்மாரி பேய்மாரி
முத்தளந்த கொத்தையெல்லாம் விட்டெறிந்தாய் பட்டணத்தில்
பட்டணமுஞ் சூழப் பலதிசையுஞ் சுற்றிவந்தாய்
கன்னியருஞ் சூழக் கனதிசையுஞ் சூழ்ந்துவந்தாள்
பூலோக மெங்குந் தானதிர ஓடிவந்தாய்
வன்னமுத்து மாரியம்மே மாருகரம் வீற்றிருந்ததாய்
பொன்னின் ரதமேறிப் பூலோகஞ் சுற்றிவந்தாய்
கயிலைதனில் வீற்றிருக்கும் காரணி சவுந்தரியாள்
பயமுறுத்து மாரியெனப் பாருலகில் வந்துதித்தாள்
வெப்பாற்ற வேணுமென்று மேன்மையுட னேநினைத்தாள்.
உடுகு தனையெடுத்தாய் ஓம்நமசி வாயமென்றாய்
பொற்பிரம்புக் கோலெடுத்தாய் தாய் – பொற்கரகம்தானெடுத்தாய்
வேப்பங் குழையெடுத்தாய் வீதிவலம் சுற்றி வந்தாய்
அன்றுமுத்து மாரியாய் அந்த வனமிருந்தாய்
அந்தவன மிருந்தபின்பு ஆதிசிவ னாருந்தான்
வந்துன் னுடனே மனமகிழ்ந்து ஏதுசொல்வார்
ஏழுலகுங் காவலல்லோ ஈஸ்வரியே மாரியம்மா
அரனோடே வாதாடும் ஆதிசக்தி மாரியம்மா
சிவனோட வாதாடுந் தேவி பராபரியே
வல்லவளே என்தாயே மாதாவே இவ்விடத்தில்
கம்பநதி மாயபுரம்கன்னனூர் காத்திருந்தாய்
சத்தி பரிகலங்கள் தானெங்குங்காவல்நிற்கப்
பத்திலட்சங் கோடி பரிகலங்கள் தான்சூழப்
பொன்னின் சிலம்பெடுத்துப் பூலோகம் சுற்றிவந்தாள்
சிற்றுடுகு தானெடுத்துச் செகமெங்குஞ் சுற்றிவந்தாள்
ஒன்பது கோடிசத்தி லோகமெங்குஞ் சுற்றிவந்தாய்
வயிரவருங் கின்னரரும் மாத்தண்ட வீரர்களும்
குரநாத தேவருடன் கோடிபடை சூழ்ந்துவரச்
சற்றே மனதிரங்கித் தாபரித்துக் காருமம்மா
நம்பினே னுன்பாதம் நாரணியே யென்தாயே
துன்ப மகற்றித் துயர்வினைகள் தானகற்றி
அச்ச மகற்றி அன்பிரக்கம் தந்தருள்வாய்
பத்தினியே நம்பினர்க்குப் பழுதொன்றும் வாராது
ஆயிரங் கண்ணுடைய ஆதிபரா சக்தியம்மா
உன்னித மாயிருந்த உத்தமியே மாரியம்மா
என்னைநீ காத்து இரட்சிக்க வேணுமம்மா
ஆறுலட்சங்கோடி அரிவையர்கள் தற்சூழக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்துலட்சங் கோடி அஞ்சலென்று தற்சூழக்
கின்னரர் கிம்புருடர் கீதநா தம்தொனிக்க
முப்பத்து முக்கோடி தேவர் மலர்சொரிய
வானத் தரம்பையர்கள் மாமலரிட் டேபொழிய
அம்புவியி லுள்ளோர்கள் அனைவோரும் போற்றிசெய்ய
இன்பமுடன் மாரி இருந்தாய் பெருங்கொலுவாய்
என்னவினை செய்தாலும் என்தாயே நீபொறுத்துப்
பேராற் பெரிய பெட்புள்ள ஆதிசக்தி
துட்டர்களைச் சங்கரிக்கும் துய்யபுக ழாதிசக்தி
உண்டென்ற பேர்க்கு ஒளிவிளக்காய் நின்றிடுவாய்
இல்லையென்ற பேர்கள்தம்மை .எரித்திடுவாய் என்தாயே
தாள்பணிந்து போற்றிசெய்தேன் சரணஞ் சரணமென்றேன்
பாதந் தொழுதேன் பலமுகமாய் தான் துதித்தேன்
தேவி சரணமென்று திருவடியை நான்தொழுதேன்
மாதாவைப் போற்றினர்க்கு மரணமொரு நாழுமில்லை
உன்னைத் தொழுதவர்க்கு ஒருகுறையும் வாறதில்லைத்
துன்ப மகற்றித் துயர்வினையை நீக்கிடம்மா
வெண்ணீறு கொண்டு வினையை யறுத்திடம்மா
பெருச்சாளி மீதேறும் பிள்ளையார் தேரேறு
ஏழுலுலகு மாளவந்த ஈஸ்பரியாள் தேரேறு
பத்திர காளி பரஞ்சோதி தேரேறு
பேச்சி மீனாட்சி பெருந்தவஞ்செய் காமாட்சி
கும்பத்து மாரி கோடிதுர்கை தேரேரு
மாரி யுடன்பிறந்த மாயவனார் தேரேரு
கன்னி கடலாச்சி ராசகன்னி தேரேரு
தெய்வகன்னி தேரேரு செளிஞ்சுடரே தேரேரு
குருநாத தேவருடன் கோடிபடை தேரேரு
ஐயனார் தன்னுடனே அவர்படைகள் தேரேரு
அம்மைபா தம்வாழி அரன்பாதம் வாழியதே.

## சித்தி

ஓம் ஐயுல் கிலியும் சவ்வும் கிலியும்
நமநம சக்தி நடனசக்தி வீரவீர சொருபி
அகோர சங்கார தேவி வாவா
வால பரமேஸ்பரியே நம வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தி அகவல்

திருச்சிற்றம்பலம்

பூவினில் வாழும் பொன்னே மின்னே
மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி
சதுர்மறை யறிவி தலைதனை யறிவி
பசுபதி நிறைவி பார்தனி லுறைவி
திரிபுர தகனி தினகர நயனி
மரகத வடிவி வரைதனி லுறைவி
முருகனை யருள்வி முருகவிழ் குழவி
கரதல கமலி கருணையின் நிமலி
அரகர வசனி அரியொடு துணைவி
அரநெறி வினையே அறம்வளர் மனையே
பார்தல நிமலி பணியணி நிமலி
கரிமுகன் துணையே கருதுவாய் துணையே
தேனே ருசியே சிவமே தவமே
ஊனே உயிரே உறவே உணர்வே
கானே மலரே கடலே யமுதே
பண்ணே யிசையே பகலே இரவே
கண்ணே மணியே கனிபோல் மனமே
வானே ஒளியே மலரே மணமே
விண்ணோர் தொனியின் மேலாம் முதல்வி
தன்னார் சிவனார் தனிநா யகமே
ஒளியே வெளியே உமையே யமயே
தெளிவே குருவின் செயலா னவளே
நவ்வே பவ்வே நடுவா னவளே
வவ்வே யெனவே வாழ்பெண் ணமுதே
ஒன்றா யிரண்டாய் மூன்றா னவளே
நின்றாய் பலவாய் நிறைநின் றவளே
உச்சி விளக்கும் ஒளிவெளி தனிலே
அச்ச மறக்கூத் தாடுமா ரணங்கே
சக்தி கித்தி சக்கா ளத்தி
கத்தி விச்சி கைப்பா ணிச்சி
உத்தா டத்தி உச்சர பத்தி
கச்சா டத்தி கர்ப்பூ ரத்தி
நித்த வினாதி நிர்கும னாதி
முத்திக் கடலே முத்திப் பொருளே
சுத்த மிலாதி துர்க்கம லாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலச மேனி வாருச மேனி
சூலி கபாலி சூட்சம சூலி
பூதமோ டாடி பூதமை யாளி
திரிபுரம் நீறெனவே சிவன் மேருவை
ஒருகையில் விற்கொண் டருள் பவளே
நீயர னைப்பெற அரனு னைப்பெற
மாகநி னைந்த மகிழ்கின் றவளே
ஒன்றா யாவள் வந்தாய் நீயே
வந்தா யொன்றா யோவிய மானே
யோகத் திருவே யுண்மைச் சினார்
பாகத் துறையும் பரம விளக்கே
கன்னிக் குமரி கரும்மா தவனார்
பின்னி முன்னி பெருநவ பத்தி
கலைசேர் பாணி கவுரிகல் யாணி
கிலைவா னுதலி சிற்றின் பத்தி
திருவே யருளே சிவசங் கரியே
கலைசூழ் நீலக் கடலா னவளே
காம கலைச்சி காம விழிச்சி
ஏம மொழிச்சி ஏம விழிச்சி
அன்ன நடைச்சி மின்ன லிடைச்சி
சொர்ண மறைச்சி கன்னல் மொழிச்சி
வனச கரத்தி வனச பதத்தி
முத்திக் கிறைவி முத்தித் தலைவி
ஞான விழ்ச்சி ஞானமொ ழிச்சி
எண்ணெண் கலையும் இடைபிங் கலையும்
பெண்ணுஞ் சிவமு மாகிய பெண்ணே
நீயர னுள்ளம் அரனுன துள்ளம்
கோவி லாகக் குடிகொண் டவளே
நித்தம் நினைப்பவர் குற்ற மறுத்து
உற்றபதத்தினில் வைக்குமா ரணங்கே
வாகாய்ச் சிவனுடன் வானவ ரறியச்
சங்கர னுடனே தாபர வெளிதனில்
அங்கிருந் துவிளை யாடுமா ரணங்கே
எண்ணே யெழுத்தே யெல்லா வுயிர்க்குங்
கண்ணே கிருபைக் கடலா னவளே
விடைதனி லேறும் விமலர்தம் வேணி
படர்சடைக் கங்கா பரமேசு பரியே
மரகதத் தமரர் மறைபுகுந் தான
நாதத் திருந்துட லாலமுண் டவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந் தத்தி லிருக்கும ணங்கே
தாலாலாம புகழாம் தன்னுடன் தனக்கு
ஆலங் காட்டி லாடிய மானே
இருவிழி யாலே எரியுண் டவனுக்கு
ஒருவிழி யாலே யுயிர்கொடுப் பவளே
சரியையுங் கிரியையும் யோகமும் ஞானமும்
கருணை இருக்குங் காரண காட்சியும்
மனப்படு கோளை வெளிப்படு வார்தம்
நினைவிலும் நினைவாய் நிற்கும் நீலி
வேறு படுத்தி மெய்ப்பொரு ளாகி
ஆறு குணத்திலு மனுகா தவளே
சக்தியோ டைந்தும் தானே யாகி
உட்புகுந் திருந்து பூசைகொள் பவளே
நீணிலந் தன்னில் நின்னடி யார்தம்
மானவி மாய்கை அறுக்கவல் லவியே
ஐந்தும டுங்கி அறிவுற் றவளே
சிந்தை மகிழ்ந்து திகழ்த மாகி
நீடுகோ புரமும் நிறமாளிகையும்
மாடமா ளிகையும் மண்டபச் சிறப்பும்
ஐங்குநூ லறியா யாக சாலையும்
தவமிக மகிழும் சதுர்மறைக் களமும்
பொற்றுகி லாடிய கொடி களும்
மணியணி விதியும் மாடசே கரங்களும்
மணமுறு குழலாள் மண்டபத் தொனியும்
மூவர் செந்தமிழ் முழங்க முதிர்ந்த
கோபத் தொனியுங் குரைகடல் முனிவோர்
வீடு பேறருள் விளன்றரு குளமும்
கொண்டலழ குயர்ந்த சந்தனச் சோலையும்
தில்லைமூ வாயிரர் திகழ்ந்திடு வீதியுங்
காவேரி நதியுங் கரியமா கடலும்
பூவுறு தடமும் போதவோ டைகளும்
உம்பர்வாழ் பதியை ஒத்துரைக் கொண்ணாச்
செம்பொன்னால் வேய்ந்த தில்லையம் பலத்தில்
ஆடரவுட னம்புலிமா னன்றுவருங் கானகத்தே
திருநடஞ் சிதம்பரம் செய்வ திசைப்பி
திசையது சுழலத் திசைமுகன் சுழலக்
கடகரி சுழலக் கரியுரிசுழலப்
பாதம் முழங்கப் பாவை முழங்கக்
கீதங் கிம்புரு நாரதர் பாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணறி விச்சியர் பார்பா ரென்னப்
புலியா யிருவர் பூரே யென்ன
நிலமுய லகனும் நெறுநெறு நெறென
அரியொடு பிரம ரருள்சேசே யென்ன
நன்மைவிளங்க ஞானம் விளங்கத்
தர்மம் விளங்கத் தானம் விளங்க
ஞானிகள் கண்டிட நான்மறை கண்டிட
வானவர் கண்டிட வள்ளுவர் கண்டிட
ஆனந்தத் தாண்டவ மாடிய சிவனார்
தேனுந் துவாவுஞ் சிறந்தநா யகியே
செய்யநா யகியே நல்லநா யகியே
அன்னம் பகிர்ந்து அளிக்கும்நா யகியே
பொன்னம் பலத்துப் போற்றும்நா யகியே
ஈரேழு புவனமு மீன்றவள் நீயே
இந்திர தேவர்க் கினியவமு தளித்தாய்
பொன்னே மலரே பூத்தமா மணியே
அன்னே அருளே அகிலான் டவளே
கம்பத் திருந்து கம்ப நாட்டி
தம்ப மேற்போய்த் தவமுற் றவளே.
ஞான மெனும்படி நாக முலைச்சி
கோதை விரும்புங் கோதை யணங்கே
சொர்ணந் திகழுஞ் சொற்கினி தான
வேதா முதலாய் வீதிவீ றடங்கா
அமர ரூறைபு மல்லியங் கோதாய்
சரணஞ்சரணம் தாயே சரணம்
ஈரேழு புவனமும் நிறைந்தருள் தாயே
எப்பிழை செய்யினு மீடேற்ற நினைத்தால்
அப்பிழை எல்லாம் பொறுப்பாய் யன்னையே
காஞ்சி காமாட்சி காசி விசாலாட்சி
அங்க யற்கண் மதுரைமீ னாட்சி
மாமாயன் தங்கை யேமகா மாரி
நின்மலர்த் தாளினை சரணஞ் சரணம்
நமஸ்தே நமஸ்தே நமஸ்து.

## வசியம்

ஓம் வாடியம்மா திறிசூலி காங்கய லெட்சுமி
என் வாக்கிலும் முகத்திலும் நாவிலும்
நின்று நடனம் புரிதாயே நடனம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் காவியம்

திருச்சிற்றம்பலம்

1. அமிர்தபரி பூரணி நளினவிழி காரணி
அன்னபரி பூரணி சொர்ணமருள் பாகரி
திமிர்ததிமி திமிர்தமென நடனமிடு மகமாரி
தேவர்தொழு தேவிதன் தாளினை வழுத்தக்
குமிர்தநல் வாயுமும் மதமுமிரு புயமும்
குடவயிறு நுதல்விழியு முடையமார் பழகும்
திமிர்தமா மும்மதத் தைந்துகர முடையதொரு
தொந்திவயி றன்சரண மென்றுநற் றுணையே.

2. துணையான கன்னனூர் மகமாரி யம்மைதாள்
தொழுதவர்க்கருள் கொடுத்தினிதுகந்தருள்வாய்
இணையான தெய்வங்கள் புவி மீதி லுண்டோ
உன்கிருபை தந்துநீ யெங்கள்துயர் தீர்ப்பாய்
கணையாளி கையில் தரித்தவன் தங்கையே
காவலாயிருமென்று காத்தானை யீன்றாய்
அணையாக வந்துன் னபயமே தருள்வாய்
ஆதியே சோதியே மகமாரி யம்மனே.

3. மகமாரி யென்றுனை நினைப்பவர் தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலேற்பனங் கண்நோய்
பகைதோஷ மானதொரு நோய்கிரக தீவினைகள்
பாடுபட் டோடுமுன் நாமங்கள் சொன்னால்
அகமகிழ்ந் தஞ்சலென் றுன்கிருபை தருவாய்
அனலெனுங் கனல்தனித் தாளநினை யம்மா
சகலகலை வல்லியே கன்னனூர் வந்த
சக்தியே சித்தியே கமலா சனத்தியே.

4. கமலமுக மழுகொழுகு தெரிவையுமை யவளூறி
கலைபல தெரிந்தருளு மரகர சிவாயமநீ
அமலபர மேசுபரி விமலகிரு பாகரி
அரலோக பரலோக ஆனந்த ரூபிநீ
கனகமக மேருதனை வில்லாய் வளைத்தநீ
காமனொடு தக்கன சிரந்தனை ஒடித்தநீ
அனவரத முன்கிருபை தந்திரட் சிப்பாய்
அதிகவர முடையதொரு மகமாரி யம்மனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அதிகவர முடையதொரு தவசது புரிந்தாய்
அத்தனார் கிருபைபெற றகமிக மகிழ்ந்தாய்
மதிவதன முடையதொருமங்கைநீயருளென்ன
மாமறையுமுத்துநீ தாவென் றுரைக்க
நதியரவு பிறைசூடு நாதனும் தருளால்
நண்ணிதலு மோறரொன்று சோதிக்க நல்கிச்
சதிரமுறு கனல்தணித் ததிகவர மேபெற்ற
சக்தியே கன்னனூர் மகமாரி யம்மனே.

6. கன்னனூர் வந்தநீ கம்பையில் வளர்ந்தநீ
கரகம தெடுத்தநீ குழையது பிடித்தநீ
முன்னமே வந்தநீ முப்புர மெரித்தநீ
மூவர்தொழு மூர்த்திநீ மூவுலகை யாண்டநீ
பன்னுமறை வேதம்நீ புன்னைநிழல் வந்தநீ
பங்கயச் செல்விநீ பாரளந் தவளும்நீ
அன்னையே மின்னையே யெனையாள வந்த
ஆதியே சோதியே அகிலநா ரணியே.

7. நாரணி நால்வருண சாதனைக் காலால்
நவரத்ன நால்வேத நல்லிரத மீந்து
பூரணம தானபொற் கும்பமது வைத்து
பூவையர்கள் மலர்சொரிந் தேகவரி வீச
வாரணத் தேவர்வலு வீரர்புடை சூழ்
வாசுகி தன்னைவட மாகவே பூட்டிக்
காரணம தானபொற் றேர்மீதி லேறிவரு
கன்னனூ ராச்சிகா மாட்சியா னவளே.

8. ஆச்சிநீ அபிராமி யாகவந் தாயே
ஐயனொடு பரிகலஞ் சூழவந் தாயே
பேச்சி பெருமா ளுடன்பிறந் தாயே
பேரான மீனாட்சி யாகவந் தாயே
காட்சிதந் தேசேரி காக்கவந் தாயே
கனல்தணித் தினிததிக வரமளித் தாயே
வளர்ட்சி சடைச்சியென வந்தவளும் நீயே
வடிவான ஆயிரங் கன்னியானவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆயிரங் கண்ணிநீ அகிலமுழு தாளுநீ
அட்சரம தானநீ அக்கினி தணித்தநீ
வேயிரு புயத்திநீ வேதமுத ல்ானநீ
வேதாந்த ரூபிநீ வேதனை தணித்தநீ
காயுகன லாச்சிநீ காமன் சிலைச்சிநீ
கச்சனி முலைச்சிநீ காரண நிறத்திநீ
தாயும்நீ தந்தைநீ தந்திமுக னைப்பெற்ற
தையலே மகமாரி யானமா தரியே.

10. மாதரி புரந்தரி வரந்தரு குமாரி
மாசது விலாதமதி போலழகி னாளே
ஆதரியுன் ஆதரவிலா தொருவ ருண்டோ
ஆருதவி சேயதனை ஆளநினை யம்மா
பாதிரி தரித்தபர நாதருட னாடும்
பாதமல ரேதுணைய தாகவருள் புரிவாய்
நாதரி நடம்புரி நலம்புரி வராகி
நரலோக பரலோக நாரியம் பிகையே.

11. அம்மைநீ அமிர்தத்தி லன்றுதித் தாயே
அழகான வலரிமல ராகவந் தாயே
செம்மைநீ தேசியின் கனியுகந் தாயே
செவ்வந்தி மலர்மீது சேர்ந்திருந் தாயே
எம்மையா ளரசன்மக ளாகவந் தாயே
எழிலான எக்கிஷந் தனில்வளர்ந் தாயே
உண்மையாய் அக்கினி தனிலுதித் தாயே
உலகுதனி லதிகதவ மானநா யகியே.

12. உலகுதனில் மகமாரி யாயவ தரித்து
ஓதரிய முத்துவகை தானது வுகந்து
நலமான வீசருக் கேமுத் தெறிந்து
நாரியுமை யாய்வந்து நற்கிருபை செய்து
கலைசெறியு மாரியுரு வாகியே வந்து
காத்தானை நல்மகவ தாகவே யீன்றாய்
நலமான தொட்டிய னிடமாக வந்த
நாதனார் நாரணன் தங்கையா னவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நாதனார் நான்முகன் கட்டளை யிருந்தாலும்
நாடுமோ உனையன்றி நம்பின பேர்க்கு
வேதனைகள்முடுகுமோநோய்பிணிகளணுகுமோ
வேறுமொரு துட்டப் பசாசுவினை வருகுமோ
பாதமே கெதியென்று நம்பின பேர்க்கொரு
பயமுண்டோ செத்தபிண மற்றுயிர் கொள்ளாதோ
நீதியோ வுன்தனை நினைப்பவர்க்கிடறுவர
நீதியோ சோதியே காத்தவ ராயனே.

14. காத்துநீ சேரிகனல் மாற்றவந் தாயே
கட்டாரி சொட்டயம் கையம்பு சவளும்
மாத்திரைக் கோலுடன் சாற்றுபரி வட்டம்
மத்தள முடுக்கைதவில் மிக்கவிரு தூத
நாற்றிசைக ளெங்கனுங் கீர்த்தியிசை பாட
நான்மறை ளோதவெண் சாமரை யிரட்ட
போற்றிசெய் தேபுஸ்ப மாரிமழை பொழியவரு
பூலோக ராசனே யீசுபரி பாலனே.

15. ஈசனுடன் நாலுமறை வேதநூல் வாழி
இந்துமதி யொத்தழகு ஈசுபரி வாழி
வீசுபுக ளேறுராச சிங்கனும் வாழி
விளைசெந்நெல் மழைபெய்து நீடூழி வாழி
வாசமுள நாடுநக ரெங்கனும் வாழி
வரிசைபெறு சைவகுல மரபுமிக வாழி
ஆகதமிழ் குற்றம் பொறுத்துநிதம் வாழி
அமிர்தபரி பூரணி வாழவா ழியதே

## வாலை

ஓம் மகமாரியே நம
ஓம் மகேஸ்பரியே நம
ஓம் மதுரை மீனாட்சியே நம
ஓம் மாயோன் சகோதரியே நம
ஓம் மலையாள பகவதியே நம
ஓம் மம்முக்கா தேவியே நம
ஓம் சிவாய சிதம்பரத்தியே நம
ஓம் நம சிவாயவா சிவாய நமநம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

திருச்சிற்றம்பலம்

1. மறையொக்கு பிறையொத்த நுதல்பெற்ற விழிசித்ர
வடிவுற்ற தனமொத்து குழலுற்ற மயிலாள்
நிறையட்ட கிரியெட்டு முறையிட்டு வழிபட்டு
நிகரட்ட கசமெட்டு முடலுக்கிரம் வெருவ
கறைபெற்ற மிடருற்ற பரமற்கு மேயன்று
கண்டுகொள் ளென்றுமே சோதித்த புகழாள்
குறைவற்ற பரனுற்ற நடனத்தி நடமொத்த
குணமுற்ற வளர்முத்து மாரியுந் துணையே.

2. துணைபெற்ற வுனைநித்தம் மலரிட்டு மடியேன்
துணைபத்ம சரணத்தி னொளிவுற்றுன் னருளால்
குணமற்ற பிணிசற்ற மனமுற்று அனுகாது
குறைவற்ற புகழ்முத்து மாரிபேர் சொன்னால்
இணைபெற்ற செயற்றுட்டப் பேயுனக் கெதிரோ
இடருற்ற சோரக்கினி நோயகற் றிடுவாய்
கழையுற்ற முலைமாதர் மலரிட்டுன் னடிபரவு
கன்னூர் வாழ்முத்து மாரியுந் துணையே.

3. ஈராறு நற்கரத் தவனையருள் பவளே
ஏகமுறு மீசருட னென்றுமுறை பவளே
தீராத நோய்ப்பிணிகள் தீர்க்குமென் தாயே
சேரிதனை யேநிதங் காக்குமென் தாயே
நாராய ணன்தங்கை யானவளும் நீயே
நாலுமறை யாகம புராணம்நீ தாயே
ஆராமை நோய்ப்பிணிகள் தீரவரு ளம்மா
ஆதியே சிவமுத்து மாரியென் தாயே.

4. உம்பர்தொழு மம்பிகை யெனுஞ் சக்திநீயே
ஓதரிய வடவைதவ சுற்றவளும் நீயே
நம்பியே காத்தானை ஈன்றவளும் நீயே
நாதவோங் காரமறை யானவளும் நீயே
தும்பிமுக னைத்தந்த சோதிபரை நீயே
சூட்சாதி சூட்சமுறு சுந்தரியும் நீயே
அம்புவியி லென்றுமெமை யாள்பவளு நீயே
ஆதியே சிவமுத்து மாரியென் தாயே.

5. ஊழ்வினைகள் நோய்ப்பிணிகள் தீரவரு ளம்மா
உத்தண்ட சண்டிகெம் பீரிநீ யம்மா
நாளுமுன் மக்கள்மனை காக்கநினை யம்மா
நாரிகவு மாரிதிரி சூலிநீ யம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுலகி லுற்றவுயி ருக்குயிர் நீயம்மா
எங்குமற மேவளர்த் தாளும்நீ யம்மா
சூழவரு பரிகலத் தோகைநீயம்மா
சோதியே சிவமுத்து மாரியென் தாயே.

6. எட்டெழுத்தட்சரம தானவளும் நீயே
ஏகமுறு மஞ்செழுத் துற்பனமும் நீயே
திட்டமுறு நவகொண சத்திபரை நீயே
திருமேவு மைம்பத்தோ ரட்சரமும் நீயே
நட்டனைய தானநவ சத்திபரை நீயே
நாப்பத்து முக்கோண நாயகியும் நீயே
இட்டமுடன் நோய்பிணிகள் தீர்ப்பவளும் நீயே
ஏகமுறு சிவமுத்து மாரியென் தாயே.

7. ஏகமா யீசரிட மென்று முறைபவளே
ஈசருக் கேழுத் தெறிந்தவளும் நீயே
நாகமணி நோய்துயர் தவிர்ப்பவளும் நீயே
நற்பிரப் பங்கோல் பிடித்தவளும் நீயே
பாகமுறு பதினாறு கோணபரை நீயே
பகருடு கொடுகரக பத்தினியும் நீயே
ஆகமுறு வேப்பநகர் காத்தவளும் நீயே
ஆதியே சிவமுத்து மாரியென் தாயே.

8. ஒளிமேவு மாதியொளி யாயிருந் தாயே
ஓதரிய நற்றவசு மேபுரிந் தாயே
வழியான கரகமொ டுடுக்கைபெற் றாயே
வன்னமுயர் பொற்பிரம் போடெடுத் தாயே
எளியேனை யஞ்சலென் றருள்புரிந் தாயே
என்றுமுன் மக்கள்மனை காத்திருந் தாயே
அழியாத வேப்பநற் குழைபிடித் தாயே
ஆதியே சிவமுத்து மாரியென் தாயே.

9. இணக்கமுட னேதேவர் புட்பமது சிந்த
ஏழுலகி லுள்ளவர்க ளும்பத மிறைஞ்ச
வணக்கமுடனே முனிவர் வந்தடி வணங்க
வளர்சித்தர் கின்னரர் மகிழ்சொற்க ளிசைக்க
மனக்கடுமைப் பரிகலம் வந்து புடைசூழ
மாதவர்வ ணங்கமகிழ் வோடினி திருந்து
இணக்கமுட னேமுபேர் மாரியென வந்த
ஏகபரை சோதியே ஆதியம் பிகையே.

– சுபம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சர்வ சக்தி அகவல்

திருச்சிற்றம்பலம்

ஓம் அம்பிகை உன்னை அடியேன் பணிய
இன்பமுடனே என்னாவில் வா வா
துன்பம் அகற்றும் சுடரொளிநீயே
என்பிரான் தாயே இச்சணம் வா வா
அகிலம் போற்றும் அங்கயற்கண்ணி
திகிலருளுடனே சீக்கிரம் வா வா
கயிலையில் லுறையும் காரண கத்தி
மயில் வாகனனின் மாதாவே தாயே
குயில் நிறமுடைய கூந்தல் நிறத்தி
பயிலும் கலைகளில் பாரண பத்தி
அண்டமும் பிண்டமும் அனாதியாய் ஒன்றாய்
நின்ற சடாட்சர நிர்மய ரூபி
குழந்தை ஒலியில் குடிகொண்டவளே
பகவதி உமையே பரமேஸ்பரியே
அரகரசிவாயம் ஐந்தானவளே
ஆனைமுகனின் அம்மையே வா வா
கானில் திரியும் கன்னியே வா வா
புண்ணிய முதலே புவனேஸ்பரியே
தன்னமில்லா ராசேஸ்பரியே
அன்னம் அழிக்கும் என் அம்மையே வா வா
உண்ணும் ஊனே உயிரே உடலே
கண்ணின் முன்னே கண்டிட வா வா
பெண்ணும் நீயே பிதாவும் நீயே
விண்ணும் நீயே மேதினி நீயே
ஒளியும் நீயே இருளும் நீயே
ஒன்பது கோழின் உறைவிடம் நீயே
ஐபத்தோரட்சரத் தமர்ந்தவள் நீயே
காளியும் நீயே கண்ணகை நீயே
மாரியும் நீயே மகேஸ்பரி நீயே
வாது செய் துட்டரை வதைத்தவள் நீயே
ஏது குற்றம் குறை செய்திருப்பினும்
தாயே பொறுத்து தற்காத்தருள்புரி
அரனுடன் கூடி அன்பாய் இருந்து
சிரித்து மகிழும் சிங் காரிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நிறத்தி சாம்பல் அணிச்சி
எங்கும் நிறைந்த ஏக ஒளிச்சி
சூலகரத்தி தூப மணத்தி
வாலைக்குமரி மலையாளத்தி
தாள ஒலியின் னாடும் வனத்தி
ஏழை எமக்கு ஏவல் அகற்றி
ஞானமெனும்படி நல்லொளிதருவாய்
அமிர்த கலச்சி அலையின் உயர்ச்சி
புறச்சி நுளச்சி பண்டாரத்தி
மறச்சி குலச்சி வண்ணாத்தி
வேளாளத்தி மிக்க குசத்தி
பாதாளம் தனில் பாம்பின் நர்த்தகி
கன்ன புரத்தி காஞ்சி காமாட்சி
மதுரை மீனாட்சி மங்கயர்க்கரசி
சாம்பலி கௌரி சதா சிவன் துணைவி
அடியேன் உடற்பிணி அனைத்தும் அகற்றி
மனையில் இருக்கும் வஞ்சனை சூனியம்
வறுமைப் பேயும் மாடன் காடன்
இருழி குறழி எச்சிப் பசாசி
மூதவி முடவன் முன்னிற்காமல்
சீதவி தந்தருள் ஜெகன் மாதாவே
கருணைக் கடலே கற்பகத் தாயே
கதிரவன் ஒளிபோல் காட்சி தந்தருள்வாய்
லெட்சுமித் தாயே நின்தாழ் சரணம்
பட்சம் வைத்தருள் பத்தினியம்மா
நித்தம் உனதடி நிதமும் பணிந்தேன்
சித்தம் தந்தருள் திரிபுர சுந்தரி
வராகியே வாலை வரம் தரும் பேச்சி
எதிரி இடும்பன் என் முன் நிலாது
அதிரவே வேலால் அறுத்தெறி தாயே
தாயே சரணம் சங்கரி சரணம்
நீயே எம்மை நித்தமும் அணைத்து
ஆசிபோல் காத்து அடைக்கலம் தருவாய்
மாசி படாத மாசற்ற சோதி
ஜேகதாம்பிகையே உன்பாதம்
சரணம் சரணம் தாயே உன் பாதாரவிந்தம்
சரணமம்மா சரணம்.

– சுபம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி பராசக்தியின் அன்புத்திருமாலை

திருச்சிற்றம்பலம்

## காப்பு

ஆதிபரா சக்தி அன்னையின் மீதுயான்
சோதி பாமாலை சூட்டிப் பாடிட – நீதியருள்
மாதவ வாரண வள்ளலாம் மன்னவ
சிறீ சித்தி வினாயகன் சீர்பாதம் காப்பு

## துதி

சிலை நுதல் உமையாள் பாகன்
தில்லையில் கூத்தன் வெள்ளிக்
கைலை வாழ்க் கடவுளாரைக்
கை குவித்து வணங்கல் செய்வோம்

## மாலை

அ. அன்னையரே உனை அன்றி எமக்கு வேறு
அருள் புரிவார் ஒருவரில்லைப் புவியின்மீது
உன்தனையே இக்கவிக்கு முதலாய்க்கொண்டேன்
ஓடிவந்து என் நாவில் உயர நிற்பாய்
என்தனையே படைத்த மகாபிரமன் ஈசன்
எந்நாளும் துணைபுரிவான் மாயோன் தானும்
தன்னை நிகர் வடிவேலன் குருவாய்க் கொண்டேன்
சரணமென்று ஐங்கரனின் தாழ்தொட்டேனே

ஆ. ஆப்பிளுத்த குரங்கதுபோல் அம்மா எங்கள்
அவல நிலை யா ரறிவார் இந்த நேரம்
கூப்பிகின்ற கைகளையும் விலங்குமாட்டி
கொடுமை செய்து தலை கீளாய் தூக்கிலிட்டார்
ஏப்பமிடு என் வயிற்றில் ஏறி நின்று
இருகாலால் செருப்போடு துவைத்தார் தாயே
மூக்கு கடவாய் இரத்தம் வழியுதம்மா
முன்னே வந்தென் னுயிரைக் காத்திடாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. இடும்பர்களின் அதர்மநிலை கூடுதம்மா
எங்ஙனுமே இரத்தாறு ஓடுதம்மா
அடம்பிடியாய் எனைப் பிடித்து வானில்ப்போட்டு
ஆக்கினைகள் செய்கின்றார் அம்மா என்னால்
மூச்சிவிட ஏலாது முன்னும் பின்னும்
முதுகுனிலும் வயிற்றினிலும் இடிக்கின்றார்கள்
பாச்சிலிடு சூலத்தால் அரக்கன் மாள தாயே
பத்தாத பத்தினியே வருகுவாயே

ஈ. ஈஸ்பரியே உன் மகிமை காண இங்கு
ஈனர்களின் இரு கண்ணை மறைக் கொண்ணாதோ
கூசாமல் உன் கோயில் கதவிடித்து
கொடுமை செய்து சிலை நகையும் எடுத்துப் போரார்
பேசாமல் நீசும்மா இருப்பதேனோ
பெற்றவளே சீறி எதிர் கொத்து தாயே
பாச முள்ள என்னுடம்பு துடிக்குதம்மா
பதுமை செறி கண்ணகையே வருகுவாயே

உ. உமையவளே திருமாலும் நீயே ஆனால்
உற்ற சிவ சக்தி மகா சக்தி ஆனால்
அமைவான அர்த்தனா ரீஸ்பர ராசனால்
அம்பிகை பவானி நல் சக்தி யானால்
கலைகளிலே நாம்காணும் தெய்வமானால்
கௌரி யம்மா எனை ஈன்ற தாயுமானால்
கொலை செய்யும் அரக்கர்களை அழிக்கத் தாயே
குலமாதா எதிரோடி வருகுவாயே.

ஊ. ஊர்காக்கும் தெய்வமென்றுனையே சொல்வார்
ஊமைகளைப் பேசவைத்தாய் என்றும் சொல்வார்
பார்போற்றும் பத்தினித் தாயே என்பார்
பழங்காலம் இன்று தொட்டு அறிந்தேனம்மா
சீர் வரிசை காணாது இருப்பதற்கோ
சிவசக்தி இளஞர்களைப் பலிகொண்டாயோ
ஆரம்மா உனை யன்றி ஒருவர் காணேன் தாயே
அன்ன பரி பூரணியே வருகுவாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. எங்கள் குலமாதாவே ஒருநாள் கூட
இடும் பொன்றும் செய்தறியேன் உண்மையாக
பாங்கான எனது முன்னோர் தந்தை தாயின்
பழிகள் வந்து எனைச் சூழ்ந்து கொண்டதாலோ
தீங்கு பலபுரிகின்றார் ஆள் மாறி மாறி
சிறு சீவன் உள்ளிருந்து வாடுதம்மா
ஓங்கார நடையுடனே ஆதி சக்தி அம்மா
ஓடிவந்து என்னுயிரைக் காத்திடாயே.

ஏ. ஏன்தாயே பார்த்திருக்காய் அமைதியோடு
எடுத்தெறியன் குலத்தால் மளுவால் வேலால்
நான் இறப்பேன் தப்பாது சிறையினுள்ளே
நல்லறிவு என்னைவிட்டு மாறுதம்மா
தீன் கேட்டால் அரப்படியும் தணீ ரோடு
சிறு நீரும் நுரையுடனே தளம்பு தம்மா
வான் காணாய் பயிர் போலே வாடுகின்றேன் தாயே
மனோன் மணியே எதிரோடி வருகுவாயே

ஐ. ஐயமதகற்றி எனை ஆழ்வாய் என்று
அனு தினமும் உனைப் புகழ்ந்து ஓதுகின்றேன்
வையகத்தில் எனைப்போன்றோர் அனேகம் தாயே
மட்டில்லா வேதனைபட் டனுபவிக்கார்
துய்யவே மதுவுண்டு சாம்பல் அள்ளி
சுடலை தனில் ஆடுகின்ற அகோரப் பேச்சி
எல்லையிலே நீ இருந்தால் இந்தவேளை தாயே
என்னுயிரைக் காத்திட நீ அருள் செய்வாயே

ஒ. ஒருமித்து என்னோடு உண்டுத்தோன் கூட
ஊர்மறைந்து கள்வனாய் மாறிக்கொண்டு
திரள் திரளாய்ப் பல பேரை சேர்த்து வந்து
செய்த நகை காசு பணம் கேட்டான் தாயே
பர பரத்து நான் விழித்து மனையைப் பார்க்க
பவுத்திரமாய் அவள் களட்டிக் கொடுத்தபோது
துரைமகன்போல் இன்று வந்தோன் கொண்டு போறான்
தொடரம்மா இவன் பின்னால் காளித்தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ. ஓம் சக்தி உச்சாடனம் கொண்ட சக்தி
ஒரு முகமாய்க் கலைமாறி நின்ற சக்தி
தீங்கு செய்தோன் மனைஎரித்தோன் பொருளைக் கொண்டோன்
தெருத்தெருவாய் சொறிநாய்போல் திரிந்திடானோ
வாங்கம்மா உச்சிமா காளித்தாயே
வடிவாக இவன் உதிரம் குடியேனம்மா
ஏங்கி அழும் எங்களிட கவலை போக்கத் தாயே
ஈஸ்பரியே ஒருநிமிடம் அருள் செய்வாயே

ஔ. ஔவானாய் ஆயிரம் கன்னியானாய்
அரனுடனே வாதாடும் அம்மையானாய்
மவ்வானாய் மந்திரம் மாய்கையானாய்
மதிக்கின்ற கண்ணானாய் மதியு மானாய்
உவ்வானாய் ஒடுங்காத நீலியானாய்
உருவானாய் அருவானாய் ஓங்காரமானாய்
என்னானாய் இவ்வேளை எங்கள் தாயே
இக்கணமே என்முன்னே தோற்றுவாயே

ஃ. இக்கணமே எனை அளிப்பான் இதுதப்பாது
இயமனைப்போல் துவக்கோடு எதிரேவாறார்
பக்கத்தில் நின்றவர்கள் ஒருவர் கனேன்
பத்தினியே உற்றதுணை நீதானம்மா
திக்கென்று என்னிதையம் துடித்து முளை
சிலீர் ரென்று நாயகியே விறைக்குதம்மா
நிற்கிறேன் என் எதிரே நீட்டி வாறான் தாயே
நிறைமுத்து மாரியே நீ வருகுவாயே

த. தரணிதனை ஓரடி அளந்த மாயன்
தங்கையரே வாருமம்மா தவிக்கும் வேளை
அரனை கண்ட பூச்சாகி அங்கும் இங்கும்
அம்மையரே இம்மகனும் ஒழிக்கேனம்மா
இரணியன் தன் உதிரமதை உண்டதாயே
ஏனம்மா உன் மனது இரங்கிடா தோ
கரனை கண்ட காப்பழகி மடியுமுன்னே தாயே
காளித்தாய் பத்தினியே வருகுவாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தா. தாங்காத கொடுமை அம்மா இங்கு தாயே
தத்தழிக்கோம் அகதி என்ற பேரும் கொண்டு
தீங்கு செய்தோர் தங்களுக்கு ஏதும்கேடு
தினம் ஒன்று காட்டுமம்மா மங்கை மாரி
வீங்கி முகம் அழுதழுது விறைத்துக் கண்கள்
வேதனையும் யோசனையும் கூடுதம்மா
ஓங்கார நடையுடனே ஆதி சக்தி தாயே
ஓடிவந்து எங்களை நீ காத்திடாயே

தி. தில்லையிலோ திருவண்ணா மலையில் தானோ
திருமயிலே தேவர் குழாம் இடத்தில் தானோ
நல்ல இதைய மழலைகளின் மொழியில் தானோ
நம்புகின்ற ஏழைகளின் மனையில் தானோ
அல்லல் வினை போக்கு கின்ற காஞ்சிதானோ
அம்மா உன் மதுரை மா நகரில் தானோ
எல்லை விட்டுப் போனாயோ கடல் கடந்து தாயே
எந்தனர்க்காய் மாதாவே வருகுவாயே

தீ. தீபத்தின் உள்ளிருப்பாய் தேவி நீயும்
தீராத மனக்கவலை தீர்த்து வைப்பாய்
தூபமிட்டு உன்கோயில் வலமாய்வந்து
தொழுதறியாப் படுபாவி ஆனேன் தாயே
ஆபத்தில் உனைப்போற்றி அழுது தழைத்தேன்
அன்னையரே ஓடிவந்து என்னைப் பாரும்
சாமத்தில் கோழி பெலி கொண்ட தாயே
தற்காத்து வரமளிக்க வருகுவாயே

து. துன்பத்தின் பிடியில் என் மனைவிவாட
துய ருற்றுப் பசிப்பிணியால் மக்கள் வாட
இன்பத்தின் எல்லையிலே எதிரிகூட்டம்
எனைத்தேட நானோட இளைத் திளைத்து
கம்பத்தில் வீற்றிருக்கும் காமாட்சி நீ
காத்திடவும் முடியாதோ கசடனென்னை
கும்பத்தில் எனை மறைக்க ஓடிவாரும் தாயே
குலமாதா சகலகலா வல்லித்தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூ. தூக்கமில்லை சொகுசான படுக்கையில்லை
சோறுகறி அன்போடு புசித்தேனில்லை
ஏக்கத்தால் எந்நாளும் நாங்கள் தாயே
எது நிகழும் என்றென்று ஏங்குகின்றோம்
பார்க்கத்தான் தாய் தகப்பன் வந்திட்டாலும்
படுபாவி பிடித்தடித்து விரட்டுகின்றார்
வாக்களியேன் மாதாவே ஓரிரவில் வந்து
வரமருளும் கலையரசி வருகுவாயே

தெ. தெய்வமே நான்செய்த பாவத்தாலே
சிறை இருக்க வைத்தானோ பிரமதேவன்
உய்வதற்கு மருந்தில்லையே ஒன்றோடொன்று
ஓடி எதிர்வருகுதம்மா மாறி மாறி
பை வைத்த காட்டதனை எடுத்துக் காட்ட
பார்த்துவிட்டு ஏதேதோ பேசுகின்றார்
துய்யவே விளங்குதில்லை துர்க்கை அம்மா
துணைபுரிந்து ஒருநிமிடம் அருள்செய்வாயே

தே. தேவி இப்புவியரசி தேவர்க் கெல்லாம்
தெரிசனையும் அருள் கருணை கொடுத்த தாயே
பாவி நான் இச்சிறையை விட்டுச் செல்ல
பல நாட்கள் செல்லுமோ அறியேனம்மா
தாவிப்பல சிறைகளைத் தாண்டிக்கொண்டு
சண்டாளர் உயிர்வதைக்கக் கொண்டுபோறார்
கூவிஉனைக் கூப்பிட்டேன் ஓடிவாரும் தாயே
குலமாதா ஜெகதாம்பிகை ஆன தாயே

தை. தைரியத்தை இழந்து என் சடலம்மட்டும்
தள்ளாடி விழும் நிலையில் உள்ளதம்மா
தெரிவை என் மனைவி மக்கள் கண்ணில் காண
சீவன் அது கூட்டில் நிதம் நிற்குதம்மா
வரிவரிசைக் கம்பிகளை எண்ணி எண்ணி
மாதாவே நாள்கடந்து செல்லுதம்மா
எரிதாயே இச்சிறையைச் சாம்பலாகத் தாயே
எக்கலா தேவி நீ அருள் செய்வாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொ. தொழுதறியேன் உனைவணங்கும் தொண்டர்தம்மை
தொல்லை செய்தேன் கண்காணா தூற்றிமிக்க
பழம் என்று அறியாத பக்தர் தம்மை
பதம் பார்த்தேன் எந்தனிடகரத்தால் நித்தம்
அழகழகாய்ப் பாடுகின்ற அடியார்க்கெல்லாம்
அவமானம் பல புரிந்தேன் ஆமை போலே
இளவயதில் உனை நினைய வைத்த தாயே அம்மா
இச்சிறையை அகற்றி வரம் தந்திடாயே

தோ. தோன்றுகின்ற முக்கண்ணி சூலகபாலி
தொல்லுலகில் எல்லையெல்லாம் கடந்த சோதி
ஆண்டுபல ஆண்டுயுகம் அழிந்தாலும் தான்
அழகு வயதே குறையா அமரராணி
மாண்டுவிடும் போதினிலும் உனை நினைக்க
மாதாவே எம்மறிவில் நில்லுமம்மா
வேண்டுகிறேன் வெஞ்சிறையில் இருந்துகொண்டு
வீரம்மா காளியே நீ வருவாயோ

தௌ. தௌதாளம் முரச சுடுக்கை தாளம் ஆர்ப்ப
இராகமொடு கிண்கிணியும் சிலம்பும் கொஞ்ச
மௌஅவ்வும் றிங்கெனவே நின்றமாதே
மானிடர்கள் குறை தீர்க்க வந்ததாயே
உவ்வென்று உந்தனையே ஓலமிட்டேன்
ஓடிவந்து என்சிறையை உடைத்திடம்மா
கௌமாரி கருணை எம்மேல் காட்டு தாயே தேவி
கயவன் நான் உந்தனிரு கால்தொட்டேனே

த். இத்திமரம் ஒருமரத்தில் தத்துமாப்போல்
இவன் மூர்த்தி உன்னை வலம் சுத்துகின்றேன்
பற்றியெரி அக்கினிக்குள் நடம் புரிந்த
பராபரியே பரமேஸ்வரி பரமன்தேவி
எத்திவரு இயமனுடன் கிரகதோசம்
எனைப்பிடியாதிருக்க அருள் செய்யுமம்மா
கத்தியெடுத்தே கழுத்தை அறுக்கும்போது தாயே
கருமாரி உன்மாலை அணிந்திடாயே.

– சுபம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனையூர் சிவமுத்து மாரி
# சிறப்புக் காவியம்

திருச்சிற்றம்பலம்

செல்வச் சிறப்பு வளர் சேனை நகர்வாழும்
சிவமுத்து மாரிமீது நற்காவியம் பாட
வல்லவை ஐந்து கரமுடைய தொரு தொந்தி
வயிற்றுடைய கணபதியை மனதில் மறவேனே
மறவனே மாயனுடன் மாதுகண்ணகையும்
மங்களரும் எங்களுக்கே உதவிபுரிய
திறமான சரஸ்வதி என் நாவில் தனில்நின்று
செய்ய புகழ் காவியம் தன்னை பகர்வேனே.

பகர் கலையின் நவகோண சக்தி தனிலொன்று
பதறியே மகமாரியாக வுருவாகி
உயர்வான சிவனிட்ட சாபமதனாலே
உலகுதனில் உமையவளும் உற்பவித்தனளே
உமையவளே உன்கோலம் அனேகவிதமம்மா
உன்னோடு இருந்திடும் பலகலைகள் அம்மா
அமைவான நவசக்தி ஒன்பது தீ யம்மா
அகிலம்தனை வாழ்விக்க வந்தவளும் நீயே

நீயே உலகுதனைப் படைத்தவளும் நீயே
நீயே அதர்மம் தனை அழித்தவளும் நீயே
நீயே எமக்கு தாய் தந்தையுமாகி
நித்திய வரம் தந்து ஆதரித் தாள்வாய்
ஆழ்வாய் நீ கொலுவில் பல அண்டர்களோடு
ஆனை முகன் ஆறுமுகன் அரிராமர் முதலாம்
பாளையக் கன்னிமார் ஏழுபேர் சூழவே
பாங்காகக் கொலுவில் அமர்ந்து அருள் தாயே.

தாயாரே மங்கலரும் கோவலரும் தேவர்
சங்கரனும் இந்திரனும் இயமதர்மராசர்
காயாம்பு நிறமுடைய கண்ணர் பல கிண்ணர்
கம்புருடர் சூழவே அன்புடன் இருந்தாய்
இருந்தரசி புரிகுவாய் இந்நகரில் செல்வம்
இறை பணிவு தருமங்கள் தளைக்க அருள் செய்வாய்
அருந்ததியே அரசடியில் குடிகொண்டு அருளும்
அன்னையே சிவமாரி ஆன அம்பிகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை சடாட்சரி ஆன கெவுமாரி
அரனோடு இடப்பாகம் அமர்ந்திருந்தவளே
துன்பங்கள் துயர் அகல எங்கள் குல மாதா
துணை தந்து ஆளுவாய் மங்கையற் கரசே
மங்கயற் கரசி நீ எங்கள் குறை தீர்த்து
மகிழ் வினோடு திருவடியில் சரணடைய வைப்பாய்
திங்களொளி தங்கும் நிழ்ல் அரசடியில் உறையும்
சிவமாரி ஆன என் சிவ லோகத் தாயே.

தாயென்று உனது மகன் அழுகின் றேனம்மா
தற்காத்து அணைத்து அருள் ராசேஸ்வரியம்மா
சேய் என்னைத் தெருமீது அலைய விடலாமோ
திருமகளே எமது ஊர் உறையும் நாயகியே
நாயகியே உன்கோபம் அதிகவித மாகி
நாலாதிசைகளிலும் கனல் போல் பறந்து
பாரினிலே சூரியவை கோதாரி யாகிப்
பாவையே பூபாரம் தீர்த்த என் தாயே.

ஊரினுள்நோய் பிணியை ஓட்டிவிடு தாயே
உனை நினைய என்னாளும் மனமருளு தாயே
பார் மீது பாக்கியம் விளைவு செய்தாயே
பத்தினியே உன்கோபம் தணிந்து அருள்தாயே
வையகம் வாழ்விக்க வந்த சிவ உமையே
வரங்கள் பல தந்து என் நோய் தீர்த்த தாயே
தையலர்கள் குரவை யொலி அரசடியிலுறையும்
சக்திசிவ மகமாரி ஆனஎன் தாயே.

ஏது பிழை செய்தாலும் பொறுத்து அருளம்மா
எங்கள் மனை துன்ப துயர் அகற்றிவிடுமம்மா
வாதுசெய் அசுரர் படைவெட்டிப் பலி கொண்ட
வளர்கதமிழ் மிழிரவே வைத்து அருளம்மா
வைத்திடும் மகவுதனை வரங்கள் பல தந்து
மாறு செய்யாமலே ஞான ஒளி தருவாய்
கைத்தேறு கமலா சனத்தில் வீற்றிருக்கும்
காரண சவுந்தரி யான காரிகையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமதான வெண் கற்பூர்வாசகி
தேனமிர்தச் சுவையுடைய தீர்த்தக்கலச்சி
பூரணமதான நிறை கும்பக்கரத்தி
பொற்கரக வேற்பிலையில் தங்கும் பரத்தி
தங்க ஒளி வைரமும் உன்முக மதற்கீடோ
சடாமுனி பசாசி ஏவல் விட்டு விலகாதோ
கண்டக் கரப்பன் முதல் தொண்டைப்புண் அம்மை
கடிய விஷம் தீரவே அருள் புரியுமம்மா

அம்மாவே உனை அறியார் உலகில் பலருண்டு
அறிவினொடு பலநிமிடம் நினைப்பவருமுண்டு
தெம் மாங்கு சொல்லியே திரிபவரு முண்டு
தெருவிலுனை விலைபேசும் மனிதர்களுமுண்டு
ஆழ்கடலில் வளரும் நற்சிப்பியுள் முத்தோ
அதிராடு அரவத்தின் நாகமணி முத்தோ
பதித்திடும் ரெத்தின பவளமணி முத்தோ
பார்புகழும் மீனாட்சி வைடூரிய முத்தோ

அத்தனை முத்துத்தனில் அம்மை சிவ முத்து
அழகான மகமாரி ஆன நல் முத்து
சிவனாரின் அருகாக அமர்ந்த உமை முத்து
சிவமாரி கருமாரி பொழிமாரி முத்தே
உமை அம்மை கைலாய வீதி வழி வரவே
உம்பர்களும் தேவர்களும் உனை அடிபணிந்து
அமைவான ரெத்தின ஆசன மளித்து
அம்மையே உந்தனுக்கடிமை நாம் என்றார்.

என்றவர்கள் சொல்லவே ஈஸ்வரியுமப்போ
இதுவில்லை எந்தனின் சேதியது கேளும்
புவிமீது அதர்மங்கள் கூடியதனாலே
பூபாரம் தீர்க்க யான் புறப்பட்டு வந்தேன்
வந்தேனே சிவனிடம் வரங்கள் பல பெற்று
மாறாத பதினெட்டு முத்துவகையுடனே
தந்தவுடனே முத்தின் பெருமையது காண
சதாசிவன் மேனியில் தானே எறிந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்தவுடன் அரன் என்னினைவு கொண்டு
ஈஸ்பரியே முத்தினிட வேதனை அரிதம்மா
அரிதான முத்துக்களை அம்மையே எறிந்தாய்
ஆதலால் நீயே இறக்கிவிடும் என்றார்
இறக்கிவிடு ஈஸ்பரி இதன் பெருமை சொல்வேன்
இறைவனெனை உனை எண்ணா தருமங்கள் செய்யா
பழிபாவம் கொலைகளவு கற்பு நிறை அற்றோர்
பாதகர் துஷ்டனர்கள் வஞ்சனைகள் செய்வோர்

செய்வோர்கள் தேவ பூசையைத் தடுத்தோர்
செய்ந் நன்றி குரு தந்தை தாயை மறந்தோர்
வைதிடும் புறம் பேசும் வாய் மதக்காரர்
மதம் மாறு பாவிகளும் குமர் கருவழித்தோர்
கருதியே ஆலய பொருள் சிலை எடுத்தோர்
காமுகர் உயிர்கட்கு நஞ்சு கலந்திட்டோர்
தெருமீது வழிப்பறியும் முள்ளூ மண்தாட்டோர்
தேவியே பால் அன்னம் கலந்து விலைவிற்றோர்.

விற்றோர்கள் மனநோக மேல் வட்டிபெற்றோர்
விலைமாதர் தனைநாடி பணவிரைவு செய்தோர்
கற்றோர்கள் பெரியோரை மதியாத கசடர்
கருதியே சிவநாமம் அணியாத பலபேர்
இப்பெரிய கொடியவினை செய்தவரை அம்மா
ஏழ்நரகில் லானமேல் நரகமதில் விட்டு
தப்பாது சடலத்தின் வடுமாறா முத்தை
தையலே இருக்கையால் அள்ளி எறியம்மா

எறியாதே வயது சிறு பாலகர்கள் முதியோர்
இறைசேவை பெரிதென்று தருமங்கள் செய்வோர்
வழுவாது நீதியின் வழிமுறையின் வாழ்வோர்
மங்கையே கற்புடன் வாழும் புவி மாந்தர்
மாந்தர்கள் வாழும் கீழ் மண்ணுலகில் சென்று
மாதரசே முத்துவரம் பெற்ற அதனாலே
வற்றாத சிவமுத்து மாரிஎன்றே உனை
வாழ்த்தினேன் சென்றுவா எனவரம் கொடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பெற்று வந்தேனே இந்நகரில் வாழ
மாதாவே எங்களுக் கேஉதவி புரிய
பொருள்தந்து அருள்தந்து பொன்மகவு தந்து
பூமிவிளை பெருகவே நீ கருணை செய்வாய்
கருணைபெறு மகவெனக் காத்தானை ஈன்றாய்
கட்டழகி பேச்சியுடன் இங்கு குடிகொண்டாய்
பொறுமையுடன் அனைவரையும் அணைத்து அருள்புரியும்
புவனேஸ்வரியாக அருள்புரிகின்ற திருவே.

திருவே உன் பொன்னடிகள் குளிர மங்களமே
திருநீறு அணி சமயம் உயர மங்களமே
பெருமைபெறு மகமாரி பரிகலங்கள் மங்களமே
பேரான வதனமார் கோவு மங்களமே
கோயிலினில் தொண்டுசெய் பெரியோர் மங்களமே
கும்பிடும் அடியார்கள் அனைவோர் மங்களமே
பாவி உனை மூர்த்தியான் மறவாதிருக்க மங்களமே
பத்தினிவாழ் அரசடி சுற்றும் மங்களமே.

சுற்று நெடு வட்டாம் காவல் மங்களமே
துயர் போக்கும் உமையவளின் கரமும் மங்களமே
பற்றுடைய நவக்கிரகம் ஒன்பதும் மங்களமே
. பாவை சிவமகமாரி பாத பங்கயமங்களமே
பங்கயச் செல்வி அணி மஞ்சலும் வாழி
பாற்கடலில் துயிலும் நெடு மாலுமேவாழி
ஐங்கரன் அறுமுகன் ஐயனார் வாழி
அம்மை திருபுவனை உமை கண்ணகையும்வாழி.

கண்ணின் மணிபோல் மிளிரும் என் அன்னையும் வாழி
காவு மலர் தாழ்மடியில் வைத்தோரும் வாழி
மண்ணில் வளர் செந்நெல் விளை சேனையூர்வாழி
மாதாப் பிதாக்கள் தெய்வ மாடுவரும் வாழி
மாடு தயிர் பால் அன்னம் மலிந்திடவும் வாழி
மாதா கை பத்திரம் உடுக்கையும் வாழி
தீதகலச் சிலம்பு பெற்பிரம்பு மிக வாழி
சிவ நாமம் எங்கனும் பரந்திடவும் வாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய காவியம் பாடினோர் வாழி
மகிழ்வினொடு செவியுற்றுக் கேட்டோரும் வாழி
காளித்தாய் கோயிலும் இலுப்பைகளும் வாழி
களனி போல் கிட்டங்கி ஆறு யர வாழி
வாழிய பூசைசெய் பூசகர் வாழி
வரிசை யொடு மடைதந்து வாழ்த்துவோர் வாழி
ஆரியநாடு திருவெற்றியூர் வாழி
அமிர்த பரி பூரணி வாழி வாழியவே

## சரணம்

ஓம் மாதாவே தாயே ஈஸ்பரியம்மா
கண்ணில் பிறந்த கனக பத்தினிக்கும்
சென்னியில் பிறந்த செல்வபத்தினிக்கும்
மருமண முடைய மகாபத்தினிக்கும்
திருமணமுடைய செல்வபத்தினிக்கும்
மாவின் கனியாய் வளர்ந்த பத்தினிக்கும்
தார்கோதையம்மா வண்ணமகள்
வசந்தமாலை விருமா பத்தினி கோதைக்கும்
சிற்றுள்ள மங்களவயிரவன் விறுமன் பூதன்
கிங்கிலியன் மாத்தாண்டன் கின்னரர் ஏழுபேரும்
பொங்கு புகழ் மாரி அம்மா உன் பொற்பூசை செய்யவந்தோம்
மாதாவே தாயே ஈஸ்பரியம்மா வைக்கும் மடையறியோம்
மடைப் பிரிவு யாமறியோம் நிற்கும் நிலையறியோம்
நின்று உமைப்போற்றறியோம் சொற்பெரியமானாகர்
குலத் துதித்த சர்ப்பமணித் தாழினையே சரணம்
சரணம் சரணம் தாயே சரணம்

ஓம் அருவே உருவே சரணம் சரணம்
அமையே உமையே சரணம் சரணம்
பரையே உரையே சரணம் சரணம்
பர்வத குமாரி சரணம் சரணம்
எமை யாள்பவளே சரணம் சரணம்
ஞானச் சுடரே சரணம் சரணம்
ஐயுங்கிலியும் ஆனாய் சரணம்
அறுகோணத்தி சரணம் சரணம்
அம்மா மகமாரி அடியோம் நாங்கள்
உன்பாதம் அடைக்கலம் தாயே.

சுபம்

மாரியம்மன் அகவல் காவியம் முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சேனையூர் சிவமுத்து மாரி அம்மன் சிறப்புக் கும்மி

சேனையூர் வாழ்ந்திடும் தாயாரின்மீது
செந்தமிழ்க் கும்மி நான் பாடுதற்கு
ஆனை முகன் சிறிசித்தி வினாயகன்
ஐங்கரன் பங்கயக் காப்பாமே.

பாளைச் சிரிப்பொலி யாளுடனும் தமிழ்
பண்ணிசை பாடிடும் வெண் கலையாள்
வாலை எனும் சக்தி மாது சரஸ்பதி
வந்து நடம்புரி என்தாயே.

தாயே உனைப் பணிந்தே கும்மி பாடிட
தாண்டவ மாடிடும் எம் சிவனும்
காயாம்பு வண்ணன் என் நந்தகோபாலனும்
காத்திட வேண்டிய பாடுங்கடி.

பாடுங்கடி ஒன்று கூடுங்கடி வேலன்
பாதம் தனையே நினையுங்கடி
வாருங்கடி மகமாரியின் வீதியில்
மங்கையரே சிறு நங்கையரே.

நங்கையரே மாயன் தங்கையராம் எங்கள்
மாரியம்மன் அருள் கண்டாடடி
வந்தாயடி வீதி வாசல் நிரையொடு
உண்டாடடி அவள் உள்ளமுதை

உண்டென்று சொல்லிடக் கண்டிடலாம் தாய்
ஓடிவந்து அருள் தந்திடலாம்
பெண்டிரெல்லாம் தாயை வேண்டிக் கொண்டால் புவி
பெற்றிடலாம் உயிர் அற்றிடலாம்.

உற்ற குலதெய்வம் நீயே அம்மா எங்கள்
ஊரினில் வாழ்ந்திடும் முத்தே அம்மா
வற்றாதம்மா நீ வாரிச் சொரிந்தாலும்
வந்து பொழிந்திடும் மாரியம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுத்தே பிணி தீரும் முத்தே கண்
மாணிக்க முத்தே வைகை முத்தே
காணிக்கைமுத்தே காத்தமுத்தே எம்
கன்னமுத்தே உயிர் பேச்சிமுத்தே

பேச்சியம்மா உன் மூச்சேயம்மா நாங்கள்
பேசிடும் செந்தமிழ் தெய்வமம்மா
ஆச்சியம்மா வீர பத்திர ரும் வந்து
ஆதரிக்கப் பாரும் தாயாரே.

தாயாரே நல்ல வழி காட்டுமம்மா மக்கள்
சஞ்சலம் போக்கிடப் பாருமம்மா
வாயாரப் பாடியே உம்மைத் தொழுதிட
வரங்கள் தந்திட வாருமம்மா

வாரும் வயிரவ தேவனே அப்பனே நாங்கள்
மண்டியிட எங்கள் நோய் துலைய
தீரும் பிணி துயர் எல்லை இல்லை ஆதி
சேடனே நாக தம்பிரானே.

தம்பிரானே சிவ என்பிரானே உமை
சார்ந்த கொலுவில் உறைவோனே
நம்பி உனைப் பணிந்தேன் முத்து மாரியே
நாடிவந்தோம் உனைத் தேடிவந்தோம்.

தேடி வந்தாள் இங்கு நாடிவந்தாள் எங்கள்
சென்னகர் மீது இருக்க வந்தாள்
ஓடிவந்து தாயைப் போற்றுங்கடி இவள்
உள்ளொளி கண்டிட நில்லுங்கடி.

நில்லுங்கடி தாயை நினையுங்கடி பெண்கள்
நேர்த்தியாய்க் குரவைகள் போடுங்கடி
தள்ளுங்கடி கும்மி தானடித்துக் கொண்டு
தப்பாது தாளத்தைக் கொட்டுங்கடி.

கொட்டுங்கடி தீபச் சட்டியில் கற்பூரம்
கோயிலைச் சுற்றிட வாருங்கடி
கட்டுங்கடி மாலை அம்மனுக்கே சூட்டி
கற்பகத்தாய் என்று போற்றுங்கடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிடுவோம் ஒளி ஏற்றிடுவோம் மாதா
பொன் செய் நிலங்கள் விளைந்திடவே
வாழ்த்திடுவோம் எங்கள் வாலை மனோன்மணி
மங்கைக்கே பொங்கல் செய்திடுவோம்.

செய்திடுவோம் பணி அன்னலெட்சுமிக்கு
செல்வச் சிறுமிகாள் வாருங்கடி
கொய்யுங்கடி பல வண்ண மலர்களைக்
கோயிலுக்கே கொண்டு சாற்றிடுவோம்.

சாற்றிடுவோம் வெள்ளி வாரமொரு முறை
சந்திக்கலாம் தாயை நிந்திக்கலாம்
வந்திக்கலாம் மகமாரி எதிர்வந்து
வாதிடுவாள் பல சூதிடுவாள்.

சூதிடுவாள் திருநீறிடுவாள் கெட்ட
துஷ்டரைச் சங்காரம் செய்திடுவாள்
மாறிடுவாள் இருள்மாயையைப் போல் வந்து
மாசற்ற தேன் சுவை தந்திடுவாள்.

தந்திடுவாய் என்று தொண்டு செய்தோமம்மா
தாழினை போற்றி அடிபணிந்தோம்
இந்நகர் மீது இடுக்கண் வராமலே
எங்களைக் காத்திடப் பாருமம்மா.

பாருமம்மா பசி நோய் பிணி ஓடப் பெண்
பாலகர் பூசகர் பூமரமும்
ஆடலம்மா கும்மி ஆடும் குழந்தைகள்
காவலம்மா மூர்த்தி பாடலுக்கு

பாடலும் வாழி உன் தலம் வாழி எங்கள்
பங்கயச் செல்வி உமைவாழி
கூடலைக் கோபுர மாக்கிவைத்த செல்வக்
குழந்தை பலபேர்கள் வாழியவே

வாழிய மட்டுநகர் வாழி தெய்வ
மாதாப் பிதாக்கள் குருவாழி
வாழிய சேனையூர் ஆளும் மகமாரி
வாழிய வாழிய வாழியவே.

சிறப்புக்கும்மி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## வயிரவர் துதி

திருச்சிற்றம்பலம்

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலைக் கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்.

வெஞ்சினைப் பரியழன் மீது போர்த்திரு
மஞ்செனப் புகையென வாலமாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறிந்தமாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்க ளேந்துவாம்.

உ

## வயிரவர் அகவல்

திருச்சிற்றம்பலம்

திருவருள் கருணை செந்தாமரைக் கண்ணன்
அரிஎன வணங்கும் அர்ச்சன ரூபன்
ஏகபூரணி இமையாள் கிருபாகரி
வேதநாயகி விளங்குமுக்கண்ணி
ஆவணி ஆண்டிட அகமிக மகிழ்ந்து
புவனேஸ்பரி தன் கிருபையினாலே
படி எனப் புகழும் பராக்கிரமமாகி
உம்பர்கள் போற்றும் உறுதியாய் வெற்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பினால் எழுதும் குஞ்சரக் கன்றே
கற்பகக் கடவுள் கருணைபோந்துதவு
அர்ச்சுதமிகுந்த ரட்சுதவாகனா
செஞ்சொல் மதுரை செந்தமிழ்ப்பிரியா
காஞ்சூர வயிரவக் கடவுளே உதவு
வடுகர் குலஞ்ஞர் மறவினாவல்லி
கொடியுடைக் குமரக் குருபரா உதவு
உத்தண்ட பத்திர காளியே உதவு
வடிவுடன் எவர்க்கும் மகவது கொடுத்து
பழுதிலா தனையேன் பரிவு போற்றுதவு
முப்பத்து முக்கோடி தேவர்களை வணங்கும் காலவயிரவா
கானலில் இருக்கும் கம்பிளி லயிரவா
ஆசிர் தருகூர் அகோர வயிரவா
சோதிபோல் எமக்குச் சுடரொளியாகி
வைத்திடும் பூசையை வளமாய் உகந்து
சித்தி தந்தருளும் சிவனே சிவாய வயிரவக் கடவுளே
சிவ சிவ சரணம் சிவாயா சரணம்
ஆதி வயிரவ ஐயனே உந்தன் அடைக்கலம் தானே.
வீச்சடையும் விளம்பிய கண்ணும்
பாரப்பகடும் பசும்பொன் மேனியும்
நெற்றியில் நயனமும் நீலகண்டமும்
பல்லும் முகமும் பவளவாய் அழகும்
ஏரிட்ட பார்வையும் எதிரிட்ட சூலமும்
வச்சிராயுதமும் மளுவுமிலங்க
நாய் வாகனத்தில் நற்புடன் ஏறி
எண்டிசை எங்கும் ஏகரூபமாய்
வந்தருள்புரிவாய் வயிரவதேவனே
உன்பாதம் நமஸ்தே நமஸ்தே.
கோழியும் ஆடும் குதிரையும் உண்டு
இரத்த வாயும் எக்கியவயிறும்
கடித்த பல்லும் கால கண்டமும்
குழிந்த பார்வையாயக் குணமுடன் வந்து
சிந்தனையில் அடியேன் செய்பிழை பொறுத்து
வந்தருள் புரிவாய் வயிரவ தேவனே
உன்பாதம் நமஸ்தே நமஸ்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேறு

ஓம் நமோ வயிரவா உக்கிரமான ஓங்கார வயிரவா
அக்கரவணி தந்து ஆடிய வயிரவா
பேய் உடன் சுடலையில் ஆடியவயிரவா
நாய்வாகனத்தில் ஏறிய வயிரவா
நரசிங்க ரூபம் தரித்த வயிரவா
இரணியன் தன்னைக் கிழித்த வயிரவா
ஏகமுகமாகி எழுந்த வயிரவா
ஆகமங்கடலைக் கடந்த வயிரவா
அக்கினியாகம் அழித்த வயிரவா
தக்கன் தலையை அறுத்த வயிரவா
சங்காரரூபம் தரித்த வயிரவ நாதர்
வருகின்ற வடிவைப் பாராய் பாராய்
மானொரு கையும் மழுவொருகையும்
சங்கொருகையும் சக்கரமொரு கையும்
தேவர்க்கெறியும் திரிசூலம் ஒரு கையில்
இப்படி பதினெட்டு ஆயுதமெடுத்து
புறப்பட்டான் ஆதிவயிரன்.
தண்டையும் சிலம்பும் சலசலவென்றொலிக்க
பந்திக்கு வீரர்கள் சேசே என்ன
பக்க வீரர்கள் சங்குநாதிக்க
துர்க்கை துந்துமி ஆடி நின்று கைகொட்ட
பத்திரகாளி பார்வதி சிவகணங்களெல்லாம்
சென்று போற்ற மண்ணதிர விண்ணதிர
ஈரேமு பதினாறு உலகமெல்லாம் கிடுகிடென
நடுநடுங்கச் சத்தா சமுத்திரம் சடசடவென்றசைய
அட்டகுலவெற்பு அசைந்து நடுங்கிட
பட்ட பத்திரர் பயந்து நடுங்கிட
காளியைக் கூட நடத்திவா வயிரவா
காடேறியைக் கட்டி இழுத்துவா வயிரவா
இருள மருளனை அழைத்துவாவயிரவா
எக்கலா தேவியை இழுத்தெறிவயிரவா
எட்டுத் திக்கு பதினாறு கோணத்திலுமுள்ள
துட்டதேவதைகளைத் துரத்திடு வயிரவா
கால வயிரவா காபல வயிரவா வாவா
நீல வயிரவா வாவா நிர்வாண வயிரவா வாவா
இரத்தங்குடித்து இரணப் பொலியுண்ட
இணக்கவயிரவா வருக வருக
உன்பாதம் சரணமே சரணம்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேறு

சீர்புகழ் வயிரவர் செந்தமி ழுரைக்கக்
கார்புகழ் மேனிக் கணபதி யருளே
ஆதி பராபரி அருளிய நுதல்விழி
சோதிபோ லெழுந்து சுடரொளி யாகி
வீதியி லெழும்பி விசும்பெலாங் கடந்து
ஓதிய மந்திர உச்சா டனமாய்
ஓங்கா ரங்கொண் டொருமுக மாகி
ஆங்கா ரங்கொண் டகார மாகி
அக்கினிச் சொரூப வனபல கதிராய்
விக்கினந் தீர்க்கும் விறும வயிரவா
அப்பமு மவலு மாலங் காயும்
செப்பிய மாங்கனி திகழ்தட் டுறட்டியும்
தேங்கத லிப்பழம் செப்பிய பலாப்பழம்
அத்த னையெல்லா மருந்திய வயிரவா
ஐயுங் கிலியு மகோர வயிரவா
சவ்வுங் கிலியுஞ் சங்கார வயிரவா
சிறியுங் கிலியும் ஏறு வயிரவா
மௌவுங் கிலியும் மான வயிரவா
முச்சூல வயிரவா முக்கண சொருபா
அக்கினி வயிரவா ஆனந்த வயிரவா
சத்தியோ டருள்புரி தற்பர னாகிப்
பாம்பெலும் பணிந்த பராபர வீதுவாய்ச்
சாம்பலு மணிந்து தலையோ டேந்திச்
சுடலையில் நின்று கடலைகாத்த தவனே
கெங்கைக் கரையிற் கிருபா கரனாய்
நம்பின பேர்க்கு நற்பத மருளிப்
பூமடை தன்னிற் பூசல் புரிந்து
ஆலை நிழலி லமர்ந்துறை சிவனே
பாதக் கொலிசு பளபளென் றிசைப்ப
நாதவீ ணைகள் நலம்பெற விளங்க
ஆதி சிவனா ரருள்புரி வயிரவா
செம்பொன் மேனியுந் திருநீற் றழகும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலறிய பல்லும் அண்ணார்ந்த பார்வையுங்
காலிற் றரித்த தண்டை பாடகமும்
கழுத்திற் கட்டிய கங்கண மாலையும்
கையிற் பிடித்த சண்டகோ டாலியும்
அரையிற் கட்டிய காவியொட்டி யாணமும்
அங்கம் முழுதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக் கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிச் சடையிற் குலாவிய பிறையும்
பச்சை மேனியும் பரிந்த முகமும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அக்கினிச் சுடலையி லவ்வேஷ மானாய்
திக்குப் பேய்களைச் சிதற அடித்துப்
பக்கப்பசாசைப் பறக்கத் துரத்தி
ஏற்றி மிதித்து ஈடழித் திடுவாய்
ஐயனே யுந்த னருளுண் டானால்
வையகப் பிணிபோய் வாதபித்த கபம்
துய்யவி யாதிகள் தூள்போற் பறக்க
எதிர்க்கும் வியாதியை இருள்போல் வெட்டி
மெய்யனே யுன்னருள் மேதினி விளங்க
ஐந்தொழுத் துச்செபித் தன்போ டரனே
நம்பினே னுன்னை நமக்கருள் தருவாய்
கரிமுக முடைய கற்பகா வருள்தா
திருவருள் புரியுஞ் சிவனே யருள்தா
பார்பதி யிடமுறை பரனே யாருள்தா
சித்த மிரங்குஞ் சிவனே போற்றி
மத்தணி மாலின் மருகா போற்றி
ஞாளியில் வந்து நமக்கருள் புரிந்து
கூளிகள் மாயக் குண்டெறிந் தவனே
அன்பாய் வந்த அடியேன்செய் பூசையை
நம்பா யேற்று நமக்கருள் புரிவாய்
ஆனக பாலமு மழகிய பிரம்பும்
ஞானபூரணமும் நமக்கருள் காட்டி
சங்கூர்ந்த மார்பில் தனியொளி காட்டி
எங்களை யிரட்சித் தருள்வாய் போற்றி
இன்பமாய் வந்து யூான் செய் பூசையை
நம்பா யேற்பாய் நமஸ்தே நமஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஆதி வயிரவர் துதி

1. தேவர்கின் னரர்முனிவர் சித்தர்கண நாதர்
ஜெயஜெய வெனப்பணிந் தேயடியி றைஞ்ச
ஆவதனி வேறுபர னுஞ்சுடலை தன்னில்
அரியதொரு கங்காள வேடமது கொண்டு
பூவுல கதிரவே தில்லைநட மாடும்
பூவனே முச்சூல மும்பிடித் தவனே
காவல னேமனமி ரங்கியருள் புரிவாய்
கங்காள தேவனே ஆதிவயி ரவரே.

2. ஆதிதரு வில்லம்பு வல்லயஞ் சொல்லை
அழகான மழுவீட்டி திரிசூலம் வாளும்
நீதியுட னேதரித் தேபரிக லத்தினோடு
நீடுபுகழ் தக்சனிட யாகம தழித்த
சோதியே சுடலைதனி லாடுபர னாரின்
துய்யசுத னெனவந்த தூமறைப் பொருளே
ஏத்திய வெள்ளிவிடை மீதெழுந் தருளி
என்முன்னெ வந்தருளு மாதிவயி ரவரே.

3. யவ்வென்று மௌவென்று மினியமறை யென்றும்
ஏகமாய் நின்றபர நாதனாய் வந்து
சௌவென்று நௌவென்று சகலதற் பரமென்ற
தானென்று நாளென்று சகலகலை யாகி
உவ்வென்று முயர்மறைப் பொருளதாய் நின்று
ஊமையொரு கங்காள வேசமது கொண்டு
யவ்வென்று முச்சுடலை யாடிவினை தீர்க்கும்
வங்வடு காயவெனு மாதிவயி ரவரே.

## திரு நீறு போட

ஓம் சிவப்புரு வடுகநாதா ஆகாச வடுகநாதா பாதாள வடுகநாதா உன் குருக்கள் காளமாமுனி தன்னாணை இவரைப் பிடித்த கண்ணூறு நாவூறு காய்ச்சல் கறுப்பு பேய் பிசாசு பில்லி வஞ்சனை சூனியங்களெல்லாம் இன்நீறு கண்டவுடன் அறுபட்டு தெறிபட்டுப் பூந்திறங்கி பூமியில் குதித்துப் போக வேசுவாகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வயிரவர் காவியம்

1. திருமருவு பரனுதவு ஆதிவயி ரவர் மீது
செந்தமிழ்ப் பாமாலை செப்புதற் கேதான்
கருமருவு விகடதட கரிமுகவ னேயுனது
கமலமல ரடியிணைக ளதனைநினை வுறவே
மருவுதிர வரசனும் பிரமனுட னுறையும்
மாதுகலை சரஸ்வதியு மனதினு ளிருக்க
அருமருவு வடுகனெனு மொருகடவு ளுனதுதிரு
அடியிணைக ளொருபோது மனதில்மற வேனே.

2. மறவாம லருள்தில்லை மன்றுள்நின் றாடி
மனுவோர்கள் பிணிதீர வருவோர்நீ ரலவோ
குறமாது தனைமேவு குகனோடு பொருசூரர்
குலம்மாள வேலேவு குமரவே ளலவோ
திறமாக வருகாளி திரிசூலி யுடனாடு
சிவனார்தன் மகனாக வருவோர் நீ ரலவோ
இறவாத முனிவோர்கள் தொழமேவு கயிலாய
மணிவாச லுறையீசர் புகழோது வோமே.

3. ஓதுமோங் காரமுக் கோணசற் கோண
ஒளியாகி வெளியாகி உருவாகி நின்று
மாதுசந் தரிகாளி யுடநடன மாடிவரு
வயிரவ சொரூபமென வருபரா பரனே
பாதுகாத் துலகங்க ளெங்கனும் நின்று
பலபே ரிடும்பூசை வேள்விக ளுகந்து
காதிலிரு குண்டல மணிந்துவரு கின்ற
கருணைபெறு நூற்றெட்டு வயிரவரும் நீயே.

4. நீயே றிங்காச னத்தினி லிருந்து
நின்னருள் புரிந்துபூ லோகத் தழைக்க
நீயேயீ ரேழு அண்டம் பயங்கொள்ள
நின்றுதான் முப்புரத் தைத்தகன மாக்கி
நீயே மதன்றனை யெரித்து முக்கோடி
நிலையான தேவரை யழித்தவனும் நீயே
நீயேவெண் ணீறணிந் தேசுடலை நின்றாய்
நித்தவே கத்தனை நிலவுபுனை வோனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நிலவுபுனை குலவுசடை யோனுருவ மாகி
நிறுமான வயிரவ சொரூபமென வந்து
அலகுசூ லாயுத காபலமு மேந்தி
ஆதிவயி ரவராகி வந்தமெய்ப் பொருளே
குலவுவெள் ளிலைசெங் கரும்பினொடு பூகமடல்
குங்கிலிய தீபமொடு செங்கமல மலரும்
இலகுமுகில் சந்தனங் கஸ்தூரி கற்பூர
மிளநீ ருடன்மடைக் ளேற்றுகந் தவனே.

6. ஏற்றுநீ ரட்டவயி ரவராக வந்த
எங்கனும் பலபூசை வேள்விக ளுகந்து
காத்தநீ கங்காள வயிரவவொ ரூபமொடு
கருணைபெறு நூற்றெட்டு வயிரவரு மாகி
பாத்துநீ யுலகமதி லெங்கும் பரந்து
பலிகொண்டு துர்க்கைக் களித்தவரும் நீயே
வேற்றுருவ தாகவே வந்தேழு கன்னியை
மணம்வேட்டு மென்மைபெறு விறுமவயி ரவரே.

7. வயிரவ சொரூபமென வந்ததற் பரனே
வடுகவயி ரவரென வுதித்தசுந் தரனே
எயிரவ வனத்தில்வரு பூதப் பசாசுகளை
எறிசூலம் வேல்விட் டெறிந்தவரும் நீயே
பயிரவஸி யுடன்சமய மாகிநின் றவனே
உத்தண்ட ஆதிவயிரவரான பொருளே.
உயிருமுடலும் பொருளு மாகிநின்றவனே
உத்தண்ட ஆதிவயி ரவரான பொருளே.

8. பொருளான ஆதிசங் காரா சிவாநம
போகாத பிணிதொலைத் தவனே சிவாயநம
இருளான ரெத்தவயி ரவரே சிவாயநம
வீரேழு புவனமு நிறைந்தாய் சிவாயநம
அருளான ஆதிசங் காரா சிவாயநம
அன்பர்க்கு அன்பான ஆதி சிவாயநம
மருளான வுன்மத்த வயிரவ சிவாயநம
மண்டலத்தோர்புகழ நின்றாய் சிவாயநம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சிவாயறீங் காரமென வந்தவோங் காரனே
சித்திதரு நித்தியம தானசங் காரனே
உபாயமது செய்வதற் கேயுதித் தவனே
உண்டென்ற வர்க்குதவு முண்மை நாயகனே
நவாயமெனு மட்சரம நாகிநின் றவனே
நான்மறைக ளும்புகழும் நடுவான தேவனே
மவாயறீங் காரவோங் காரத்து நித்தமெய்ப்
பொருளாகி நின்றதொரு ஆதிவயி ரவரே.

10. ஆதியே யெங்களை யிரட்சிக்க வந்தநீ
அண்டபகி ரண்டமு மடுக்காய் நிறைந்தநீ
சோதியே சுடரொளிய தான்தொரு கடவுள்நீ
துட்டவயி ரவர்கோடி சூழவரு பவருநீ
நீதியே யுந்தனை நினைப்பவர் தனக்குமுன்
நிற்குமத கரிகளொரு திக்கிலோ டாதோ
ஊதிபம தானதொரு கண்கண்ட தெய்வமே
உன்னருள் புரிந்துதவு முண்மைநா யகனே.

11. நாயகம தானதொரு நாதா நமோநமோ
நாடுபுவ னம்களூ நிறைந்தாய் நமோநமோ
தாயான ஆதிசங் காரா நமோநமோ
சதுர்மறை புகழ்ந்தவயி ரவரே ந்மோநமோ
பாய்பரிகள் தலையிடற வருவாய் நமோநமோ
பாருலகி லதிகதே வதையே நமோநமோ
நாதனே யென்பிழை பொறுப்பாய் நமோநமோ
நாதாந்த ஆதிவயிரவதேவ தேவனே.

12. நமசிவா யப்பொருள் தானவரும் வாழி
நான்மறைகள் வாழிசர சோதிமிக வாழி
நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி
நித்தியகல் யாணிபத் திரகாளி வாழி
நமதுகட கரிமுகவர் பாதமலர் வாழி
நங்கைதெய் வரனைமண வாளனும் வாழி
உமதுபுகழ் புவிமீதி லோதுவோர் வாழி
உத்தண்ட வயிரவர் வாழவா ழியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நைய்வேத்திய மந்திரங்கள்

ஓம் வெள்ளி இதன் பிட்சகி தந்தகுரு நைய்வேத்தியம் சமர்ப்பாயம் பாவயாமி பாறு கோடி பதாதி கௌறுவம் திறி லேசம் காசிகா பிரனாதி ஆதிவயிரவா வமலேசம் ரெத்தகபாலம் ரெத்த கெங்கா யெலம் ஏந்திரநயம். ஆனந்த கோலாகல நிறுமான ஆதாரம் சுவனவாகனம் வந்தே பூதப்பிரேநாத வடுக காயாசாஸ்திரம் சதிநிலம் வங்நவங்ங வடுக வயிரவ மூர்த்தியே இளனிகதலி அன்னபோசன ரொட்டி கற்பூர தீபநைய்வேத்தியம் சகலமானதும் பூசையாம் சமர்ப்பாயம் பாவயாமி.

## வேறு

ஓம் ரெத்த சடாதாரம் தேருமயம் ஆதி கோலாகல நிறுமானியம் கிங்கிலிய பூதப்பநாத வடுக வயிரவ மூர்த்தியே நம்.

## ஒப்புவிக்கும் மந்திரம்

ஓம் ரெத்த கபால சடாதாரம் ரெத்த கங்கா ஜலம் சிவமயம் அத்தோதயம் நற்கமல மாந்திரம் அத்தினு நயன கோலாகல நிறுமானிய கிங்கிலியா மாணிக்கா தாரம் பூதப் பிரேதப் பசாசி நாத வடுக மாகேந்திரம சூலவாகனம் வந்தே பூதப்ப நாத வடுகாய வாங்கு குருவேசரணம் இந்தா வாங்கப்பா வாங்கு

## வேறு

ஓம் சுகாதி வயிரவாய நம – ஓம் ஆகாச வயிரவாய நம
ஓம் செர்ண வயிரவாய நம – ஓம் சிறி சூல வயிரவாய நம
ஓம் வீரப் பிறதெட்ஷண வயிரவாய நம – ஓம் திரிபோக வயிரவாய நம
ஓம் துர்த்தகை வயிரவாய நம – ஓம் எட்டட்ட வயிரவாய நம
ஓம் இலங்கா மகாளியே நமோ நமக

## தீபம் காட்ட

ஓம் வயிரவாய நம – ஓம் ஆதி வயிரவாய நம
ஓம் குருநாத வயிரவாய நம – ஓம் சண்ட வயிரவாய நம
ஓம் கபலா வயிரவாய நம – ஓம் கங்காள வயிரவாய நம
ஓம் அசித்தாங்க வயிரவாய நம சுவாக


உ

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையு நின்னைத் தெழுத்தை
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் இறைவா கச்சியே கம்பனே

அரகர நமோபார் பதி பதே அரகரா மகா தேவா
அரகர நமோபார் பதி பதே அரகரா மகா தேவா
அரகர நமோபார் பதி பதே அரகரா மகா தேவா

வயிரவர் மாலை முற்றிற்து
சுபமங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# நாகதம்பிரான் பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

வெற்றி வினாயகரின் விளங்குதொந்தி நாணே
வேலவர்முன் னேசெல்லும் வெற்றியுறு நல்லரவே
அவுணர் புரமெரிக்க வரன்வளைத்த மேருமலைக்
கொற்றவில்லின் நாணே கோளர வேபோற்றி
வாளகிரி தனைச்சூழ்ந்த வாரியிலே மாயவன்றான்
நீளுமணிப் பாயதாய் நித்திரைசெய் தேகிடந்த
நாகமணி பொதிந்த நாகவர சேபோற்றி
நற்பாம்பு தாராட்டும் நாயகியார் பார்பதிதன்
களபதனக் கச்சே காரிகைக் குகங்கணமே
காதிலுறு குண்டலமே கவிக்குங்கொற் றக்குடையே
வாசுகி யனந்தன் மகா தக்கன் சங்கன்
குளிகன் பதுமன் மகாபதுமன் கார்கோடன்
என்னுமெட் டுவகை யெழில்நாகங் கள்போற்றும்
சகமனைத் துஞ்சுமந்த சமர்த்தர வேபோற்றி
ஏகவுட லைந்துதலை யெழில்நாக மேபோற்றி
வெண்மை நிறம்படைத்த வித்தக னேபோற்றி
நாகம்நால் சாதி அறுசாதி விரியன்
வரிவண்டு வகையுடன் லளலைநால் சாதி
துவாதச தேளுடன் சோடச மண்டெலி
நட்டுவக் காலி நாய்நரிநீர் தவளை
இருபது சிலந்தி எழிலோந்தி செவ்வட்டை
செங்குழவி செய்யான் கருங்குழவி வண்டுவகை
உமதுதிரு நாமமதை யோத வனுகாது
நாகதம்பி ரானே நல்லசங்கு பாலகரே
அடிபணிந் தேனடியேன் அபய மபயம்
அரவர சேயுன் னடைக்கலமே நாககன்னி
தாயாரே நாகராசாவே சரணமையா
சரணம் சரணம் உன் தாழ் சரணம் வாசுகியே.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நாகதம்பிரான் காவியம்

திருச்சிற்றம்பலம்

1. அரியபுவி தன்னிலுயர் மதிவதன முடைய
ஆதியுமை சோதியுரு வாகியுல கெங்கும்
பிரிவினோடு கணநாதர் முனியிருடிதேவர்
பங்கயன்மால் லிந்திரன் சரசோதி துணையாய்
தெரிவைகத் துருவீன்ற மைந்தர்புகழ் பாடச்
சீருலவு வலவைமண வாளனென வந்த
கரியின்முக முடையகுரு வைந்துகர ரென்னுங்
கணபதியை யொருபொழுதுங் கனவில் மறவேனே.

2. கனவனச கொடியிடை தனதுமதி நுதலழகுக்
கற்பியலுய ரிருமாது காசிபர்க் காகி
வனிதைகத் துருவென்னும் நாமமது வளருலகில்
அறிவுமிகு வெகுவான மைந்தர்களை யீன்று
அனவரதகிருபையொடு அருணனையுங்கெருடனையும்
அவனிதனி லடிமையாயத் தனதுபணி செய்யென
அகங்காரங் கொண்டுமே அன்னவளு மோத
அருந்தவ ரொருவருலகந்த னில்வந் தனரே.

3. முனிவரொரு வேள்வியது செய்யவென் றெண்ணி
மூவுலகு தன்னிலுயர் கிருபையது கொண்டு
இமைதரும் கத்துருவின் மைந்தர்களை யங்கு
எட்டட்ட திக்கிலும் காவலது வைத்துப்
புனிதமொடு முனிவேள்வி செய்தமிர்த மீந்தபின்
பொங்கரவ மெட்டையுஞ் சங்கரன் தாங்க
வனிதையவ ளீன்றவிரு மதலையர்கள் பகையாய்
வளருலகில் வந்துதவு நாகதம்பி ரானே.

4. வந்துதவு சிந்தைநினை வானதெப் போது
மலைவாவி அகழியடு வானீறல் வங்கு
பொந்திலுறை சிந்துமுதல் புடையனோடு விரியன்
பொறிவழலை எலியரணை வர்க்கமுத லாக
நிந்தனைகள் செய்யாம லெங்கள்துணை யாக
நிகழட்ட திசைகாவல் நீயொழிய வுண்டோ
புந்திமகிழ் வோடுபுவி பொங்கல்மடை யுண்ட
பூசுரன மரபிலுயர் நாகதம்பி ரானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பூசுரன் மரபன்நீ பொங்கரவ மானநீ
புவிமுற்று முன்சிரசில் தாங்கினவன் நீயே
காசிபன் மதலைநீ கம்சனுக் காகக்
காளியன் பேர்பூண்ட கட்செவியும் நீயே
நேசமுட நுமதுதிரு நாமமது வோதத்
தீதுதரு விஷநாக மணுகாமல் வந்து
வீசிவிளை யாடிமரந் தேடியுறை கின்ற
மேதினியி லருளுதவு நாகதம்பி ரானே.

6. அருளாகி யறிவாகி யறிவுமே லாகி
அரவாகி உருவாகி ஆபரண மாகிப்
பொருளாகி யுமைவிரலில் மோதிரம தாகிப்
புற்றகம் வெற்றுகில் உற்றமத மாகி
அருளான போதினில் நச்சரவுக் கஞ்சி
ஏழைகள் பயந்தனது ஆழ்மனதி லெண்ண
மருளதே யணுகாது பற்பல விஷயங்களின்
வாயெயிறு கட்டியருள் நாகதம்பி ரானே.

7. நாகமே நரர்கூவி ஆலிங்க னங்கள்
நற்பூசை பொங்கல்பால் தர்ப்பண மளிக்க
ஆகமதிற் புளகிதங் கொண்டமிர்த மென்று
அதிகோப மானவிஷ நாகமது வுண்டு
ஏகவுரு வாகிநெடுங் கோவில்குடி கொண்டு
என்றென்று மேகிருபை தந்துதவி செய்து
பாகமக வேதநட நாகசிவ மான
பதிவாழ்வு அருளுதவு நாகதம்பி ரானே.

8. பதிவாழ்வு தரமான கிருபையது கொண்டு
படமாடி மனிதரெதிர் நடமாடி நின்று
கதியாகி ஆழிமால் சயனபா யாகிக்
காசியினில் ராகுகே தாகியுல கெங்கும்
சதியாகி வாராத தெய்வம் நீ யலவோ
தடமேவக் குயில்கூவ மடவார்கள் போற்ற
விதிமேவு கதிதாவு மதிதூவ வாழும்
விஷநாச மாகிவரும் நாகதம்பிரானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வருநாக சாதினா லறுசாதி விரியன்
வரிவண்டு வழலைழநால் பனிரெண்டு தேளும்
இருவெட்டு மண்டெலி நட்டுவக் காலி
இருபது சிலந்திநாய் ஓந்திநரி தவளை
உருவுற்ற அறணைசெவ் வட்டைபுரி குழவி
உமதுதிரு நாமமது வோதவக லாதோ
திருவாக வருநாக ராசனே யுமையீன்ற
செகமதனி லுறைகின்ற நாகதம்பி ரானே.

10. உறையவிட மானதொரு ஆலயவி ருட்சம்
உற்றமனை புற்றுமுதல் முற்றிலுஞ் சென்று
மறையவ னிராசனென வணிகர்வே ளாளர்
வந்துனது விதிமுறையி னாலமர்ந் தாயே
இறைவன்முன் னாளிலே நாகநர ரென்று
இவ்வரிசை தந்தன ரெங்கள்துயர் மாற்ற
பறைதாள வொலியோசை நாகசுர மார்ப்பப்
பதிமேவி அருளுதவு நாகதம்பி ரானே.

11. பதியனைய வேதியர்கள் தேவர்மனை தன்னிலும்
பரிவுபெறு மரசர்குல மரமதுகள் தன்னிலும்
கதிகள்தரு வணிகர்நரர் குடிகொண்ட மனையிலும்
காராளர் புற்றிலுங் கனமோ டுறைந்து
மதியுலவு செகமீது நரர்போற்றி வாழ
வடிவனைய படமதுகள் விரிவுசொலி மேவ
நிதியமென மணிமேவ வுலகாள வந்த
நிமலரணி பணியென்ற நாகதம்பி ரானே.

12. பணிகள்தரு நவரத்ன தங்கமொடு வங்கம்
பாராழி தன்னிலுயர் முத்துமுத லாக
தணிகைவளர் உங்கள்மணி தங்களுக் கீடோ
சத்தியந் தப்பாத கத்துருவின் மக்காள்
அணியநகை நல்லதென அரனுமுமை யுங்கண்டு
ஆபரண மாக்கியே அவனிபுக ழாக
பிணிகளொடு படுவிஷம் மாறவருள் செவ்வாய்
பிரம்மமர பானகுரு நாகதம்பி ரானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரமாதி கிருபையொடு சரயோக நிதியே
பிசகாத குலதெய்வ சிவதேவ கதியே
அரனா ரிடத்திலே குறையாத பதியே
அடியார்க ளோடுவுற வாடிவரு துதியே
வரமாக வுங்கள்புகழ் சிரிமேது தித்தால்
வருவினைகள் நஞ்சுமுதல் மாற்றியருள் செய்து
சிரநாக மணிமேவ வுலகோர்கள் போற்றத்
திருவாக வருகிரண நாகதம்பி ரானே.

14. மேவலர்கள் புகழ்வாழி திரிலோகம் வாழி
வேதனுமை சரசுபதி மால்சிவன் வாழி
தேவரொடு இந்திரன் கணநாதர் வாழி
தேடரிய நாககுல மாநிலம் வாழி
தாவுவிழிக் காசிபன் கத்துரு வாழி
தளிர்மேவு சிலநாக மணிநீடு வாழி
பாவலர்கள் புகழ்மொழிகள் பாடினோர் வாழி
பாரிலுயர் பாக்கியம் தந்தவர்வா ழியதே.

15. தந்துவது சங்கரனுஞ் சாம்பவியும் வாழி
தக்கபுகழ் பெரியோர்கள் புலவோர்கள் வாழி
வந்துதவு சரசோதி மாலயனும் வாழி
மாதாப்பி தாக்களொடு மக்கள்மனை வாழி
சிந்தினொடு பொந்திலுறை கட்செவிகள் வாழி
சீரிலுறை காராளர் மேழியும் வாழி
புந்திமகிழ் வோடுபண் டாரியா வெளியிலுறை
புதுமைசெறி நாகம்மை வாழவா ழியதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பேச்சியம்மன் துதி

ஓம்சத்தி சித்தி யானந்த சக்தி
திரிலோக சத்தி பாதாள சத்தி
பரலோக சத்தி பரமே சுபரி
ஐயுங் கிலியும் அகோரப் பேச்சி
அரிஓம் பகவதி ஓம்பரா சத்தி
தேவர் தேவி சேயிழை வணங்க
வருவாய் வருவாய் வந்தரு குமரி
தருவாய் தருவாய் தற்பர நாயகி
தாம்போ டணிந்த தயவுள்ள மாதே
மெய்ப்பொரு ளாகமே தினியினில் வாவா
தற்பொரு ளாகத் தயவினில் வாவா
வங்கமா மலையில் வசித்திருப் பவளே
ஐயுங் கிலியும் அகிலாண்ட ரட்சகி
சவ்வுங் கிலியுஞ் சங்கார வல்லி
பவ்வுங் கிலியும் பாதாள யோகி
பரமேஸ் வரியே பத்திர காளி
ஆனந்த மாகி ஆடிய ரூபி
பள்ளயப் பேச்சி பழிகாறி
ஏறடி வல்லி ஏகாந்த ரூபி
கன்னிக் குமரி காந் தாரி
கோலா கலங்கள் கொண்டிருப் பவளே
உச்ச மில்லாக் கொடி யிடையே
நம்பின பேர்க்கு நன்மைகள் செய்வாய்
பேய்களை யகற்றுவாய் பிணிகளை நீக்குவாய்
நான்செய் பூசையை நன்றாயேற்பாய்
தாயே சரணம் தாளிணை சரணம்
நமஸ்தே நமஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சியம்மன் அகவல் I

ஓம் அரிஅரி ஆனந்த காளி
ஆகாயப் பேச்சி அம்மையும் வாறாள்
பள்ளயப் பேச்சி பலியுண்ண வாறாள்
குத்து முலையுங் குளிர்ந்த மருங்கும்
பட்டி னுடையும் பாம்பினா பரணமுஞ்
செத்தா ரெலும்புஞ் சிவதா வடமும்
விரித்த சடையும் வெண்பிறைப் பல்லுங்
கடித்த பல்லில் காண்பது பிணமுஞ்
சுற்றியே பூதந் துணையாய் வரவே
காலிற் சிலம்பு கலீர்க் கலீரென
பாதச் சிலம்பு பளிர்ப் பளீரென
எடுத்த சூலம் இலங்கி வரவே
பம்பை துந்துமி படர்ந்து முழங்கச்
சுடலையிற் பூதஞ் சூழ்ந்து வரவே
குறும்பறை வயிரவர் கூட வரவே
எச்சிப் பசாசை எத்தி யெடுத்துக்
கூட்டி வரவே கோழிகள் கூவ
உடுக்குத் தொனியை உத்தமி கேட்டப்
பூசை முகத்திற்குப் போக வெழுந்து
கள்ளுக் குடிக்கக் கன்னி நினைந்து
பூதப் பசாசைப் பிடித்துவிழுங்கி
எச்சிப்பசாசை எட்டத் துரத்திக்
கூவென்றாள் பேச்சி குலதே வதையாள்
வெள்ளிப் பிரம்புடன் வீரவாள் கையில்
வேப்பங் குழையும் விபூதியுமெடுத்துச்
சிவனை நினைந்தாள் தீட்சைமந் திரத்தால்
ஓமென்ற சொல்லை உச்சரிப்பாக
ஆம் என்ற சொல்லை அம்மை நினைந்து
அறுகோண அட்சர ஆசன மிட்டுத்
தேவி யிருந்து சிவபூசை செய்து
அள்ளி அமுதை அருந்த வெண்ணிப்
படைப்பி லிருக்கும் பலகார முண்டு
வாழைப் பழத்தை வாரி விழுங்கிக்
கஞ்சா மதுவைக் கன்னி யருந்திக்
கள்ளுடன் சாராயம் கனவெறி யாகி
மண்டி மனைக்கு வாக்குக் கொடுத்துப்
போறாள் அம்மன் புவனேக பரியாள்
பள்ளயப் பேச்சி பாவாய் சரணம்
எங்களைக் காக்கு மீசுபரி சரணம்
சரணஞ் சரணந் தாயே சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வேறு II

அரியோம் பகவதி துர்க்காம் பகவதி
சுந்தரி மாகிவழங்கி அக்கரவு மேவியீஸ்பரி
ஒடுங்காத சக்தி உன்மத்த வயிரவி
சதுரங்க பாக்கியம் தந்தென்னை யாள்வாய்
கார ணத்தி கார்நிற மேனிக்
கங்காளி தூளி வராகி வாமி
நவகோ ணத்தி நாரா யணத்தி
சிவகோ ணத்திற் சேர்ந்திருப்பவளே
இரத்த பாணி இரத்த பாணிச்சி
முறத்த பாணிச்சி மோகமா தங்கி
சண்டப் பிரசண்டி சாமுண்டி யகமுண்டி
துர்க்கை சாமுண்டி வேதவே தாந்தி
காமகோ ணத்தி காமபா ணத்தி
சராசர நீலி மகிடசங் காரி
உச்சிட்ட காளி உதிரமா காளி
சுடலையி லாடுஞ் சோதிப்பிர காசி
ஆடும் பராபரி ஆகாச துர்க்கை
இந்திரன் திசையில்வாழ் ஈசனார் வேந்தே
ஆவென வெளிப்பாய் ஆனந்த வேந்தே
சற்றும் வடதிசைச் சாமுண்டி வேந்தே
ஒருகையில் வாளும் உதித்த கேடயமும்
பருகிய சூலமும் பாசாங்கு சமும்
இன்ப மளிக்கும் ஈயண்ட பாத்திரமும்
காதினில் தோடும் கருங்கனி வளையலும்
சிவனொடு நடனி சீக்கிரம் வருக வருக
என்னைப் பகர்ந்து எதிர்செய்யும் பேயை
உன்கை வாளால் உடலைப் பகிர்ந்து
பற்றி யெரிக்கும் பகவதியே வருக வருக
ஓம் ஆம் நடனத்தி ஓம் ஆம் வீரவீரி
அரி அரி சிவாய நம.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சியம்மன் காவியம்

1. துதிபெருகு மதுமாங்கி ஷத்தி திரிசூலி
துணைமேவு மபிராபி யகிலோக தேவி
மதிரூப காரணி மாதங்கி ஓங்காரி
வடவாமு கத்திதிரு மாயன் சகோதரி
எதிராக வேவரு மணியுந் தளத்தி
இணையொருவ ரில்லாத பரிபூ ரணத்தி
அதிரூப பரிகலத் தழகுபெறு பேச்சி
அம்மைதன் பாதமலர் தன்னைமற வேனே.

2. வளைவுற்ற கார்மொய்த்த விளிசுத்த மயிலாள்
வருதுட்டர் தனைவெட்டி எதிரிட்ட புகழாள்
மழையுற்ற குழலுற்ற தெனவெற்பு நிகராள்
வளர்துர்க்கையெனவெப்ப நகருற்ற நிகராள்
களையொத்த முகிலொத்த பிணிவிட்டு அகலக்
கனமிக்க புகழ்சித்தி வரமுத்தி யருள்வாள்
தளர்வுற்ற உலகத்தில் அருள்சித்தி முத்தி
தருபேச்சி யம்மையே தயாபரப் பொருளே.

3. அனவரது கலியாணி யதிரூப நாரணி
அகிலமுழு தறமே வளர்த்தஅபி ராமி
மனமகிழ்ந் தன்புதரு மாயி மகமாரி
மாதரி துரந்தரி மதனகெம் பீரி
கனகநற் கமிலைவளர் காவினோ தரியே
காளிதனை அன்பினொடு மாளுமா தாவே
எனதுபகை வினைதீர வந்தவுமை யம்மையே
ஏகபர மேசுபரி பாதமலர் துணையே.

4. இளமதலை யழுதது தனைக்கண்டு தாயார்
இன்பமொடு பால்கொடுத் தேவளர்க்கலையோ
அழகுள்ள பாலர்செய் குற்றமது போக்கி
அருள் தந்து என்றுமே ஆளநினை யம்மா
மழைசுற்று மேகநற் குழலழகு மாதே
மாயாபு ரத்தியே வளர்கன்ன னூர்வாழ்
புளகத்தி லுயர்முத்து மாரியென வந்த
பூவையே பேச்சியென வாழுமா தாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஐயமகல் வேப்பநக ராதிசிவ சத்தி
ஆனந்த மாய்நடன மாடுமா காளி
ஓயதொரு நற்சுடலை காத்தரண சூலி
ஓதரிய பிணமருந் துத்தண்ட தண்டி
ஐயமுறு பரிகலத் தழகுபெறு பேச்சி
அரனோடு திருநடன மாடுமக மாரி
வையமதி லென்கவலை மாற்றியரு ளம்மா
மாதுவளர் பேச்சியென வாழுமா தாவே.

6. ஓதுவே னுன்புகழை யாதியபி ராமி
ஒன்றுமறி யாதநா னுன்னடியை நம்பினேன்
நீதியா யென்றுமே காக்கநினை யம்மா
நின்புகழ் கடைச்சியென நின்றபத்தினியே
வாதுபுகழ் தக்கனுயிர் மாளவைத் தவளே
வையமதில் மாங்கிஷம் தனையுகந் தவளே
வேதனைகள் வாராமல் நீகிருபை புரிவாய்
மேவரிய பேச்சியென வாழுமா தாவே.

உ

## பேச்சியம்மன் நைய்வேத்தியம்

ஓம் யோகி யோகி யோகா யோகி தேவாரணப் பேச்சி அம்மே வாவா உன் திருமன மிரங்கி வாவா ஓம் ஆம் மென்ற ஆதிபேச்சி ஆகாசப் பேச்சி வாவா வெற்றிக்குதிரை வெடிவாள் களற்ற பச்சக்குதிரை முன்னடக்க பவளக் குதிரை பின்னடக்க ஆதிபேச்சி அம்மே வாவா ஓம் றிம் ஐயும் கிலியும் சவ்வும் கிலியும் மாக நின்ற ஆதி சக்தி ஆகாசப்பேச்சி அம்மே வாவா வந்து நிற்க வேசுவாகா.

## பேச்சி உச்சாடனம்

ஓம் யோகி யோகி யோகாசனத்தி சண்டாளி நிறுமானி கௌரிபுத்திரி வராகி மாற்றானைப் பிழந்த சண்டாளி வல்லி டும் பேச்சி மண்டாட வாடி மனதில் நினைக்க வாடி ஆதிவராகி அகிலாண்ட நாயகி மம்முக்காதேவி மலையாள பகவதி வாரிச்சுருட்டி வாடிமகிட சங்காரி நில்லென்றால் நில்லு கட்டென்றால் கட்டு திருகுதிருகு ஆடுஆடு பேசி பேசி சிவ சக்தியானைப் பேசு சுவாகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பத்திரகாளி அகவல்

அரிஅரி காளி அட்சர காளி
திரிபுர கயிலையிற் சென்றிருந் தவளே
பொங்குகட லேழையும் போக்கவரங் கேட்டவளே
பொய்கையில் லாத புவனைக் கடலில்
உதித்தமா காளி உருவேறு திருவேறு
ஒருநொடியி லோடி வாடிமா காளி
பொன்னேர் முலையாளே புரிச்சடை யணிந்தவளே
அரனைக் கண்டு அவர்மடி பிடித்தவளே
சுடலையி லாடியகாளி பாடிய சூலி
சூரசங்காரி சுடலையிற் பேச்சி மீகாமி
விரித்த சடைச்சி வீரிகெங் காளி
மேகாமீ புலித்தோ லுடுத்த விடைச்சி
வெண்மையுள் ளவளே வில்லம்புள் ளவளே
வெள்ளிமண் டபத்தில் வீற்றிருந்தவளே
உறுத்திய பார்வையும் உதிரநற் குழலும்
விரித்த சடையும் விளங்கிய பல்லும்
அணிந்த நீறும் ஆதித்த னொளியும்
திறந்த மேனியுந் திக்கெங்கும் பார்வையும்
விளித்த விளியும் சிரித்த முகமும்
எரித்த பார்வையும் எக்கிய வயிறும்
தூக்கிய பாதமும் துணுக்கென வெழுந்து
வாறாள் காளி வாற வடிவைப்
பாராய் பாராய் பயமிலா உளத்தொடு
பாடிய காளி ஆடிய சூலி
இடது புறத்திலே யியம ராசனும்
வலது புறத்திலே பரமேசு பரனும்
முன்னேமும் மூர்த்தி தேவர்களும் பின்னேகின் னரர்களும்
கோடிவயி ரவருங் கூறுபரி கலமும்
கன்னிமா ராயிரவர் கலந்துமே சூழ்ந்திடவும்
ஆலாத்தி யேந்திடவும் அம்மானை ஆடிடவும்
அகில மெங்கும் அகிற்புகை விச
அரகர சிவசிவ அட்சர காளி
திரிபுர சங்கரி திகழெ காளி சங்கரி
பரிபுர சங்கரி பவனொளி சங்கரி
பாடிய காளி பரமேசு பரியே
கண்ணன் சகோதரி கங்காள ரூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகி மாதங்கி மாயா சொரூபி
மாய்கையுள் ளவளே மார்கமுடை யவளே
வன்னமா மயிலே வரத்திற் பெரியவளே
கெங்கைக்கரையி லிருந்தவளே கேட்டபலி கொண்டவளே
கோயிலி லிருந்தவளே கேதாரி தீர்த்தவளே
கோபாலன் தங்கையரே கோப முடையவளே
அகோர காளி அழலம் பகத்தி
சுடலையில் நடதி சூட்சாசூட் சத்தி
தில்லையில் சிவனுடன் திருநட னம்புரி
வல்லவி காளி மறைமுதல் திருவே
தக்கன் மகளாய்த் தவமது புரிந்து
அக்கர வணிவோன் அருள்தனை யடைந்த
மனைவியாய் யுமைந்து மமதையால் தக்கன்
இனியதோர் யாகம் இயற்றுவ தறிந்து
அவ்விட மடைந்து யாகம துளித்த
சங்கரி காளி சடுதியில் வாவா
வராகி மாதங்கி மாயா சொரூபி
பராபரி நிராதரி பச்சைமால் தங்கையே
வாவா வந்து மலர்மர மேறி
ஆவேச மாகியுன் அன்புதா காளி
ஐயுங் கிலியு மாகிய காளி
சௌவும் மௌவு மாகிய சக்தி
வாவா காளி மலரடி பணிந்தேன்
தாதா வரங்கள் தந்தருள்காளி
தாயே யுனது சரணம் பணிந்தேன்
வாவா வீசு வரந்தா காளி
நானுன தடிமை நீயுமென் தெய்வம்
சரணம் சரணம் தாயே சரணம்
நமஸ்தே நமஸ்தே நமஸ்து.

## காளியம்மன் காவியம்

1. அரியட் சரத்தி திரிசூலி ஓங்காரி
அபிராமி மகமாரி யானகெம் பீரி
திரிபுர சதானந்தி சம்பூர் நகர்ப்பதி
செழிக்கவரு தேவிபத் திரகாளி மீது
தெரிதமிழி னன்புசெறி காவியமி யற்றத்
தெரிகரட கரிமுகமு மழகுவெண் கோடும்
வருகரட விகடதட மனையகுட வயிறன்
மலரடிக எனுதினமு மனதிலய ரேனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அவ்வுநவ் வுஞ்சவ்வு மானகெம் பீரி
அம்மைபத் திரகாளி மீதுதமி ழோத
மவ்வுமுவ் வுஞ்சிறிய மானசிவ பரனும்
மாதுமையும் மலரயனும் வள்ளிகா தலனும்
உவ்வுக்கு ரீங்கார மானசிவ பரனும்
ஓதரிய கலியாண வீரபத்திரனும்
சவ்வுநவ் வும்பவ்வு மானகண் ணகையுந்
தாமரையில் மங்கலரு மேதுணைய தாமே.

3. ஆதியந் தரிகெவுரி யானகெம் பீரி
அரலோக பரலோக அரிசகோ தரியாள்
பாதிமதி சூடியுட றாடுமக மாயி
பரலோக சிவலோக நவலோக காளி
சோதிசங் கரிதுர்க்கை யரள்சிங்க வாகினி
துய்யமகி டாசுரன் சிரநடன வீரி
நீதிசெறி மானிடர்கள் நோய்பிணிய கற்றவரு
நேசமுறு வீரபத் திரகாளித் தாயே.

4. இந்துமதி குடியட னேசுடலை தன்னில்
இன்பமுட னேநடன மாடுமக மாயி
கந்தனொடு கரிமுகன் தன்னையருள் தேவி
காரணிவ ராகிகலை யேறுசிவ காளி
விந்தைசெறி முக்கண்ணி வேதவே தாந்தி
விமலதிரி புரகமல விழியாயி ரத்தி
சந்தமிகு பாடல்புனை அடியார்செ ழிக்கவரு
தாயான வீரபத் திரகாளித் தாயே.

5. ஈசனொடு முப்பத்து முக்கோடி தேவரும்
இருஷிகின் னரர்முனிவ ரெண்டிசையுள் ளோரும்
தோகையே நின்னடி பணிந்துநின் றேத்தச்
சுருதியுட னேசுடலை தனில்நடன மாடி
வாகையுட னெட்டுக்க ரத்திலா யுதமும்
வகையாக வேபிடித்த தசுரரைவ தைத்த
தோகையே அடியவர்கள் நோய்பிணிதொ லைக்க
சூலியே வீரபத் திரகாளித் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உம்பர்தொழு பகவதி பாம்பணிம னோகரி
உத்தண்ட கெம்பீரி வீரிஓங் காரி
சம்புறுச டாட்சரி மாதங்கி திரிசூலி
சாலோக சாமீப சாயுட்ச தேவி
நம்பின வர்க்குதவு நாரிபர கௌரி
நளினகெறு விதயோக கமலகா மாட்சி
கொம்புகுழல் பலதொனிமு ழங்கிடுங் கோவிலுறை
கோதையே வீரபத் திரகாளித் தாயே.

7. ஊழிக லத்திலொளி யானசிவ சத்திநீ
ஓங்கார ரீங்கார மானசிவ சத்திநீ
தாள்பணிப வர்க்கருள்கொ டுத்தசிவ சத்திநீ
சாரூப மாகவே தான்முதலிருந்த நீ
வாழ்புவன வாலைதிரி புரகமல சத்திநீ
மாதவன் தங்கைநீ மதியினொளி யானநீ
காளிநீ யுன்னடிய ருயர்வடைய வேண்டியசெய்
கன்னியே வீரபத் திரகாளித்தாயே.

8. எட்டெட் டறுபத்து நாலுகலை யானநீ
ஈசுபரி யாகவே வடவையை எரித்தநீ
முட்டவே மதுமாங்கி ஷத்துணி யானநீ
மோதுகட லேழையும் முன்னேகு டித்தநீ
சுடலையிற் பேச்சியுரு வாய்நடனமிட்டநீ
துட்டப்ப சாசிகளை வெட்டியே வென்றநீ
கட்டழகி யுன்னடியர் செல்வஞ்செ ழிக்கவரு
காளியே வீரபத் திரகாளித்தாயே.

9. ஏகபர னாரிடமு றைந்தாய்ந மோநமோ
இடர்ப்பிணிகள் துயரகல வந்தாய்ந மோநமோ
நாகச டாட்சரியு மானாய்ந மோநமோ
நாலிரண் டாயுதமெ டுத்தாய்ந மோநமோ
வாகனைய தக்கனைவ தைத்தாய்ந மோநமோ
வருபூதப் படையழகி யானாய்ந மோநமோ
பூகமுயர் நாடுநகர் அடியார்செ ழிக்கவர
பூவையே வீரபத் திரகாளித் தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஐயனுட னேயிருள னானசிவ மருளன்
ஆடிவரு காடேறி யாதிவயி ரவரும்
துய்யவிறு மன்வீர முண்டனொடு பரிகலஞ்
சூழவே நரர்கொலுவ மர்ந்தினிதி ருந்து
வையமதில் மானிடர்கள் நோய்பிணிய கற்றியே
வருபூசை பெலிபூசை தானுகந் தருளும்
தையலே யடியாரை வாழ்விக்க வருகின்ற
தாயான வீரபத் திரகாளித்தாயே.

11. ஒளியாய் முதற்சத்தி யாயிருந் தாயே
உலகோர்கள் பிணிதீர் வருள்புரிந் தாயே
தெளிவான முக்கோண மீதுறைந் தாயே
சிவனாரி டப்பாக மாயிருந் தாயே
களிகூர நின்கிருபை காட்டவந் தாயே
அளிமீறி யிசைபாடு மடியார்கள் துயர்தீர்க்கு
மம்மையே வீரபத் திரகாளித் தாயே.

12. ஓதுபரை யானசிவ சக்திசி வாயநம
ஓங்கார மாறாத ஒளியேசி வாயநம
நாதவொளி யானசிவ தாயேசி வாயநம
நாதாந்த மானமெய்ப் பொருளேசி வாயநம
வேதவே தாந்தியென வந்தாய்சி வாயநம
விண்ணுமண் ணும்புனலு மானாய்சி வாயநம
சோதியே யடியாரை வாழ்விக்கு மன்புடைய
தோகையே வீரபத் திரகாளித் தாயே.

13. ஔவுநவ் வுஞ்சௌவு மானாய்சி வாயநம
ஐயுங்கிலி யுங்கிறியு மானாய்சி வாயநம
சௌவுமை யுங்கிலியு மானாய் சிவாயநம
சகலகலை யாகம மானாய்சி வாயநம
பவ்வுமுவ் வுஞ்சிறியு மானாய்சி வாயநம
வரவைபுனல் வற்றக்கு டித்தாய்சி வாயநம
கொவ்வையித ழன்னையே வந்தவினை நீக்கிடுங்
கோதையே வீரபத்திரகாளித் தாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அ∴கர மணிந்துநட மாடிநின் றாயே
அன்றுமகி டாசுரனை வென்றுவந் தாயே
சக்கரம ணிந்தமால் தங்கையென் தாயே
சண்முகன் தந்தையு மாகிநின் றாயே
தக்கபுகழ் செல்வங்கள் தயிரியம் பெருவாழ்வு
தந்துனது அடியாரை ரட்சியுந் தாயே
கக்குமத கருவியாய் செந்நெல்வயல் மிகவிளைய
வருள்தெய்வ வீரபத் திரகாளித் தாயே.

15. ஏர்வாழி மறைவாழி யடியார்கள் வாழி
யீரேழு புவனமும் வாழிமிக வாழி
பார்வாழி மன்னர்செங் கோல்நிதம் வாழி
பஞ்சாட்ச ரத்துடன் பாவையர்கள் வாழி
கார்வாழி மட்டக் களப்புநகர் வாழி
காசினியி லித்தமிழை யோதினோர் வாழி
சீர்வாழி சம்பூர்ந கர்ப்பதிக் கோவிலுறை
தேவிபத்ர காளிபதம் வாழிவா ழியதே

## காளியம்மன் பஞ்சகம்

1. கங்கைமதி தங்குசடை யுங்கமல மங்கையுயர்
கஞ்சமலர் தும்பையொடு கொண்டையி லணிந்து
சங்கைசெறி வண்புலி யுரித்தரை போர்த்துத்
தங்குமர வம்புனையுஞ் சங்கரனோ டுண்டு
துங்கநட னம்புரியு மங்கைதிரி சூலி
சுந்தரச வுந்தரிது ரந்தரிப தத்தை
இங்கிதமு டன்பணிய வென்றுமருள் மேவ
மின்பமுறு தும்பிமுக வன்துணைய தாமே.

2. வண்டிசைகள் கண்டுகுயில் நின்றிசைகள் பாட
மண்டலம திர்ந்திடவ லம்புரிமு ழங்க
வெண்டிசையி லுள்ளவர்கள் நின்றுமலர் தூவ
வீசனுட னேதில்லை யம்பலந் தன்னில்
அண்டருட னேமுனிவர் தொண்டர்கள் துதிக்க
அன்பினுடன் வானர்கை மத்தளமு ழங்கத்
தண்டையொடு கிண்கிணிசி லம்புநட மாடுஞ்
சத்திமா காளிபதம் நித்தமய ரேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அயிராணி திருமாது அயிலோக தேவி
அன்னபரி பூரணி ஆனந்த ரூபி
பேயுடனான விசைகள் பாடவே சுடலைதன்னில்
பிரியமுட னுரியநட மானதுப ரிந்த
பயிரவிசெ ம்பவள வாயிதழ்முக் கண்ணி
பலகலையி னெளியனைய வகிலமுழு துடையாள்
செயல்மருவு மடியவர்கள் பிணிதொலைத் தருளவரு
தேவிமா காளிபத மேதுதிசெய் வோமே.

4. நித்தபரி பூரணி சத்துருசங் காரணி
நிற்குமருள் பாகரி சற்குருத யாபரி
உத்தமவு தாரணி சத்திசிவ நாரணி
உற்றபரி பூரணி முத்திதரு பூரணி
வித்தகவி னோதரி மத்தணிம னோகரி
வெற்றிகிரு பாகரி புத்திதரு பூரணி
சுத்தமுயர் சூரசங் காரியோங் காரி
தோகைமா காளிபத மேதுதிசெய் வோமே.

5. ஆதியபி ராமிகெவு மாரிதிரி சூலி
அரலோக பரலோக ஆனந்த ரூபி
சோதிமகா தேவிமா காளிரண சூலி
தோடவிழ நிர்த்தருட னாடுபர தேவி
வேதனைகள் நோய்பிணிகள் தீரவரு மாரி
மேவரிய பேச்சியென் தாயனைய சத்தி
பாதமல ரேதுணைய தாகவருள் தருவாய்
பாரிலுயர் வீரபத் திரகாளித் தாயே.

உ

## கண்ணகை அம்மன் பிரார்த்தனை

சீர்வளரும் பூவிலுறை செல்வியே தெள்ளமுதே
ஏர்வளரும் பூலோகத் தீஸ்வரியே என்னமுதே
கார்வளரும் காவிலுறை கன்னியே காரிகையே
பார்வளரும் பைந்தமிழ்சேர் பைங்கிளியே பார்பதியே
தத்துபரி மீனவனை வெல்லவென்று மேதினியில்
மாதுமையாள் தானே வரவிடுத்த தையலே
தேன்பொதிந்த மாவின் கனியாகி மாறன் விழிமறைத்து
மேவுங்குழவியதாய் மெய்ப்பேழைக் குள்ளிருந்து
காவேரி யாறுதனிற் கண்டெடுத்து மானாகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலுடன் வளர்த்த ஆரணங்கே ஆயிளையே
மாசாத்தார் தன்மகவை வதுவை முடிப்பதற்குத்
தேசாந் தரமாகச் சென்றுமீ காமனும்போய்
நாகமணி கொணர்ந்து நற்சிலம்பி னுள்ளீடாய்
ஆகமுடன் பாதத்தி லன்றணிந்து கோவலர்க்கு
நன்மணஞ் செய்து நயந்து சில நாள்சென்று
மாதவியார் ஆடல்கண்டு மன்னுபுகழ்க் கோவலரும்
ஆவலுட னேமயங்கி ஆயிழைக்குப் பொன்தோற்றுக்
கையிற் சிலம்பெடுத்து கனமாறன் மதுரையிலே வந்திடவே
மீறுபுகழ்த் தட்டானும் மீனவன் தன் மாளிகையில்
விலைபேசி நானும் விற்றும் தருவனென்று
ஆசைபல சொல்லி அழைத்துப்போய் மாறனிடம்
சிலம்புத் திருடனிவன் செங்கை பிடித்துவந்தேன்
வலிய கொலைபுரிந்து வாங்குஞ் சிலம்பையெனத்
தார்வணிகன் றன்னைத் தகாதகள்வ னென்றெண்ணி
வெட்டிவிட வேயறிந்த மெல்லியரே திட்டமுடன்
ஒருகை குழைபிடித்து ஒருகை சிலம்பேந்தி
மதுரை நகர்தேடி வந்த மகாபத்தினியே
வேங்கை மரத்தடியில் வெட்டிவைத்த கோவலரைப்
பொன்னூ சியாலே புரைந்து உயிர்மீட்டு
மார்போ டணைத்து மகிழ்ந்துபல வும்பேசித்
தாங்கரிய பொன்னின் சரடுருவிப் போட்டுவந்து
பழிகார மாறனிடம் பழிகேட்ட பைங்கொடியே
மாறன் படியதனில் மணிச்சிலம்பு தானடித்து
மீறுமணி தெறித்து வெண்தணலாய்ச் சிந்தி
தட்டா னுடன்மதுரை தானெரித்த தையலரே
முட்டநின்ற கற்கத வேழுடைத்துக் கனபாண் டியன்மடிய
வட்டமுலை தானெறிந்த மங்கையே யஞ்சுகமே
அன்றிடைய சேரிவந்து ஐயை தனைக்காண
வெந்தணன்மேல் வெண்ணெயள்ளி யப்ப மனதாறிக்
கண்டு மகிழ்ந்து காரிகையார் சேரிதனில்
மேவுமெரி வாராமல் மிக்கவரங் கொடுத்து
மாவுலகில் வந்தமரு மங்கையே யஞ்சுகமே
பூவுலகிற் கொம்பெடுத்துப் பூமலரெல் லாஞ்சொரிந்து
ஆவலுட னேமுறித்து ஆர்ப்பரித்து அரிவையர்கள்
அம்மானை யாடி அரும்பூ சைகள்புரியக்
கோபந் தணிந்த கோமள பத்தினியே
மேவரிய பூசைதன்னை மேதினியோர் தான்கொடுக்க
மானிடர்கள் நோய்தீர்த்த வஞ்சியே யஞ்சுகமே
உன்கோப மாற்ற உலகளித்த பூசைதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவு கன்னி யர்க்களித்த மெல்லியலே
பாலமிர்த நற்பூசை பலர்பார்க்க வேகளித்தக்
காதலுட னேமகிழ்ந்த காரி கையே
செந்நெருப்புக் கன்னி சேயினைக் கன்னியர்க்கும்
ஆகாச பத்தினிமார் ஐம்பத் தொருவருக்கும்
மோகக் குழலியர்கள் மூவா யிரம்பேர்க்கும்
தோதக பத்தினிமார் தொள்ளா யிரம்பேர்க்கும்
அட்டசத்தி யானவர்கள் எட்டுப்பேர் தங்களுக்கும்
செந்தா மரைக்கன்னி செப்பிலுறை கன்னியர்க்கும்
விந்தை செறியும் விறுமபத் தனிக்கும்
நாககன்னி யோடு லோககன்னி நாயகிக்கும்
அம்மானைக் கன்னியுடன் ஆனவுயர் கன்னியர்க்கும்
கன்னிமா ரெல்லோர்க்குங் காணரிய மங்கலர்க்கும்
விறுமன் வயிரவர்க்கும் மெய்ப்பூத மொன்பதுக்கும்
கிங்கிலியர் மார்த்தாண்டர் கின்னரரி யக்கருக்கும்
காளியுடன் மாரி காமாட்சி பேச்சியர்க்கும்
வராகியா னந்தி மாதங்கி சவுந்தரிக்கும்
ஏவல்முன் னோடி பின்னோடி யானவர்க்கும்
மேவரிய பூசைதன்னை மேதினியி லேகொடுத்த
மானிடர்கள் நோய்தீர்த்த வஞ்சியே யஞ்சுகமே
மதுரைப் பதியிருந்த மந்திரபதி யம்மனுக்குப்
பரிவான நற்பூசை பாலமிர்தம் நற்பொங்கல்
தானே யுனக்கென்று சாற்றிடவே தையலரும்
மந்திர பதிதானும் மலரடியைத் தான்பணிந்து
விந்தைசெறி யும்கயிலை மேவியே நீர்போகில்
வந்திடுவோம் தாங்களுந்தன் மலரடியை விட்டகலோம்
என்றவர்கள் சொல்ல இணங்கியே கண்ணகையே
அன்னையென வேயுலகை ஆதரித்த அம்பிகையே
முன்னமே பாற்கட லில்பள்ளி கொள்ளும்
பச்சை வர்ணன் தங்கையே தீர்க்கமுடன்
சேடன் மணிச்சிலம்பு சென்றுகந்த நங்கையே
பதினாறு கொணத்துப் பத்தினியே பார்வதியே
உந்தன் கிருபைதங்கு உத்தமியே மங்கலையே
நாற்பக்க முக்கோண நாயகியே நாகமணி
தீர்க்க முடனணிந்த சேயிழையே மானாகர்
பாக்கியமென் றேவ ளர்த்த பைங்கொடியே
கோவலர்க்கு ஆக்கமுட னேமணஞ்சேர் அம்பிகையே
அண்டர் தொழுஞ்சோதியே மண்டலஞ்சேர் ஆதியே
மாரிபது மாதங்கி வாலை திரிபுரையே
காளிகெவு மாரிசிங் காரி கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்முருகன் தாயே விநாயகனை யீன்றவளே
மகிடாசு ரன்சிரசில் வாதுநடங் கொண்டவளே
கயிலைகிரி மேவிவளர் காரணியே பூரணியே
அயிலோக நாயகியே ஆதிசிவன் நாரணியே
கண்ணீரிற் பிறந்த கனகபத்தினியே
சென்னியிற் பிறந்த செல்வப் பத்தினியே
திருவுடன் சேர்ந்த சிவபத் தினியே
மருமண முடைய மகாபத் தினியே
பராசர மாமுனி பயின்றபத் தினியே
மாவின் கனியாய் வளர்ந்தபத் தினியே
மானகர் தன்னிடம் வளர்ந்தபத் தினியே
இடைய சேரியி லிருந்தபத் தினியே
வணிகர் மனைவியாய் வாழ்ந்தபத் தினியே
கோவலர் கையிற் குலமணிச் சிலம்பை
வீதியில் வில்லென்று விடுவித்தபத் தினியே
மதுரையில் மீனவன் வணிகரை வதைக்கப்
பழியது கேட்ட பாவைகண் ணகையே
பாண்டியன் படியில் மணிச்சிலம் புடைத்து
அன்றவன் மதுரை அழித்தகண் ணகையே
மந்திர பதிக்கு வரமுடன் பூசை
தந்தோ மென்ற சக்திகண் ணகையே
அடியேன் கவலை அனைத்தையு மாற்றி
வடிவா யிரங்கும் மாதுகண் ணகையே
மாவிலுறை மாதே காவிலுறை தேனே
தாவுபுகழ்த் தாயே நாலுமறை நீயே
அன்னையே தந்தையே
அம்மையே செம்மையே
ஆதியே சோதியே அண்டமே பிண்டமே
அத்தமே சித்தமே முத்தியே வித்தையே
அங்கையே செங்கையே மங்கையே நங்கையே
அன்பினுடன் என்கவலை என்பிணிக ளென்துயர்கள்
அனைத்தையு மகற்றி யடியேற்கருள் புரிவாய்
சகலகலை யம்மையே சற்கோண நாயகியே
உந்தனது பாதம்அனு தினமு நான்பணிவேன்
என்னையா ளம்பிகையே யாதிகண் ணகையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கண்ணகை அம்மன் காவியம்

1. திருமருவு பூலோக மெங்கினும் வாழ்கின்ற
செல்விகண் ணகைமீது சிந்துதமி ழோதத்
தருமருவு தந்திரமுக னுங்குமர வேளுஞ்
சடையத னிற்புவியை வைத்தசங் கரனும்
மருமருவு வாலைசர சோதிமா லயனும்
வடதேச முறைமதுரை மீனாட்சி யம்மனும்
மருமருவு வள்ளிதெய் வானையுட னென்னாளும்
மலரடிக ளொருபொழுதும் மனதில்மற வேனே.

2. மனதினிட மேநின்று குதிகொண்டெழுந்துவரு
மாணாகர் மகளாக வந்தசெந் திருவே
கனவிலும் நினைவிலும் மறவாம லேயுனது
காதலுறு காவியந் தன்னையோ திடவே
அனுதினமு முனதுபத மலரிருகை கூப்பி
ஆனந்த மாகவடி யேனுரைசெய்
வனிதையே மாசாத்தார் மருகியே சொற்பிழைகள்
வாராமல் முன்னின்று மனதுகந் தருளே.

3. அருளான மாதவிக் கேயருள்கொ டுத்தநீ
அன்றுமொரு பொற்பதுமை சேரவைத் ததுவுநீ
மருளான கோவலர்க் கேமாலை யிட்டநீ
மலையரசன் மகளாக வந்தவளும் நீயே
இருளான காடுதனில் ஏழுபேர் கள்வர்
எழுந்துவர ஆபரண மெல்லா மளித்தநீ
பொருளான பொருளும்நீ பொன்னின்மா நங்கையே
பூலோகம் வாழ்கின்ற பூவைகண் ணகையே.

4. பூவையே புவியதனி லுள்ள மானிடர்கள்
பூஞ்சோலை போலவொரு தேரது வியற்றத்
தாவியே தேருருள வில்லாம லேமனந்
தளர்கின்ற வேளையது தானது வறிந்து
ஓவியம தாகவே தொண்ணூற்று மூன்றினில்
உயர்விருட் சம்மருத மரமாக நின்றாய்
ஏவியே சிகைபிடித்ததுபோல வந்த
இயல்வான கண்ணகையை மனதில்மற வேனே.

5. இயல்வான விடவரவின் நூபுரந் தன்னை
எடுத்துமே கோவலர்க் கீந்தபின் சென்று
மயில்போலும் மாதவிக் கேகடன் தீர்த்து
வாருமென் றுற்றமண வாளனை யனுப்பித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயிலான வெண்பட்டு மாலைகள் சரப்பளி
சொர்ணமுட னேமுத்து மூக்குத்தி மின்னக்
குயில்போல வேயெழுந் திடையசே ரியில்வந்த
கோதைகண் ணகையையொரு போதும்மற வேனே.

6. மறவாம லேயுனது புகழ்பாடி வருகின்ற
மானிடவர் தங்கள்பிணி தீரவருள் செவ்வாய்
குறையாத பொருள்வரவு நிறையாக வேவருங்
குலதிலகர் வணிகர்குல மேயவத ரித்து
முறையாக முத்தமிழப் பாமாலைகளில் நெடில்
முன்பாக வேசொல்வோர்க் கின்பமுடனீந்து
குறையாத பாக்கியம் மென்மேலும் மருள்வாய்
குதிகொண்டு வந்திடுங் கோதைகண் ணகையே.

7. கோதையே கோவலர் சிலம்பதை யெடுத்துக்
கொடிதான மதுரைதனி லேவிற்று வரவும்
நீதமுட னேவைத்த திருவிளக் கதுவும்
நீள்கரக மனதில் நீர் பூவதுவு மிட்டு
வாதையுட னேயருகில் வைத்தஅடை யாளம்
வாடிவிடு மென்றவரு மேபோன பின்பு
காதலுட னேகண்ணை மூடியொரு நினைவால்
காணாத சொற்பனங் கண்டகண் ணகையே.

8. கண்டவுடன் கூந்தலைநீ விரித்ததுவும் பொய்யோ
காடுசெடி முள்ளிடறி வந்ததுவும் பொய்யோ
துண்டான கோவலரைக் கண்டதுநீ பொய்யோ
தோகையே பொற்சரடு விட்டது நீ பொய்யோ
அண்டுமே சொக்கர்செயல் பெற்றது நீ பொய்யோ
ஆளனுட னேகதைகள் பேசினது பொய்யோ
மண்டைதனில் நூலுருவி விட்டதுநீ பொய்யோ
மாறனிட பொற்கத வுடைத்தகண் ணகையே.

9. மாறனிட பொற்கத வடைத்துவந் தாயே
வடசேரி தென்சேரி யாகவந் தாயே
தேறியே தாச்சிகை பிடித்திமுத் தாயே
செம்பொற் சிலம்பதைத் தானெடுத் தாயே
மாறியே படியதனி லடித்துடைத்தாயே
மாகாளி யாயுருக் கொண்டுநின் றாயே
வேறுமொரு நோய்பிணிய கற்றவந் தாயே
வேங்கைமர நிழலுற்ற மெல்லிகண் ணகையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கண்ணகைத் தாயேயு னக்கோல மோலம்
காங்கேயன் தாயேயு னக்கோல மோலம்
பொன்னின்பந் தாடியு னக்கோல மோலம்
பொற்சரட்டுக் காரியு னக்கோல மோலம்
அன்னையைக் கொன்றா யுனக்கோல மோலம்
ஆறதனில் வந்தாயு னக்கோல மோலம்
பின்னற் சடைச்சி யுனக்கோல மோலம்
பிஞ்ஞகன் தேவியு னக்கோல மோலம்.

11. ஓலமென வேவந்த கண்ணகைத் தாயே
ஒரு நொடியில் மதுரையை யெரித்துவரு நாளில்
சீலமுட னேபொய்கை தன்னிலே கன்னிமார்
சீரான திருமஞ்சள் தேறது முறித்துக்
கோலமுட னேவட சேரிதென் சேரியாய்க்
கூக்குரலிட் டேயவர்கள் வெற்றியது கொள்ள
மாலையினில் வைத்தவெரி போல்மன மகிழ்ந்து
வையகந் தொழவந்த மாதுகண் ணகையே

12. மாதினிரு தனமதனில் வைத்துமோ ரிடைச்சி
வாரியே வெண்ணைதனை வைத்தமுத் திடவே
காதுதனில் நாராசம் விட்டதுபோ லோடிக்
கரைந்துருகி யேவரக் கண்டொரு பறைச்சி
பாதிமுந் தானையது கொண்டுமே வீசப்
பாங்காக விருவரையுங் கண்டுள மகிழ்ந்து
நீதியுட னேயுங்கள் சேரிவே காதென்று
நிச்சயம் தாய்ச்சொன்ன பத்தினிப் பெண்ணே.

13. பத்தினி யம்மா வுனக்கோல மோலம்
பார்பதி யம்மா வுனக்கோல் மோலம்
உத்தமி யம்மா வுனக்கோல மோலம்
ஓங்கார சத்தி யுனக்கோல மோலம்
முத்தமிழ்ச் செல்வியு னக்கோல மோலம்
மூவர்க்கு மூர்த்தி யுனக்கோலமோலம்
அத்தனார் பாரியு னக்கோல மோலம்
அம்பிகை யம்மாவு னக்கோல மோலம்.

14. அம்பிகை யாளேயு னக்கோல மோலம்
ஆயிரங் கன்னியுனக்கோல மோலம்
பைம்பொற் சிரம்பியு னக்கோல மோலம்
பாண்டியனை வென்றாயு னக்கோல மோலம்
செம்பவள மாதேயு னக்கோல மோலம்
திருவொற்றி யாளேயு னக்கோல மோலம்
அம்புவியி னாளேயு னக்கோல மோலம்
ஆதிகண் ணகையேயு னக்கோல மோலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஆதியே பட்டிநகர் தம்பிலுவில் காரேறு
அதிகமுள வீரமுனை கல்முனைநீ லாவணை
ஓதியே பாண்டிசெறி கல்லாறுமகி ழூரெருவில்
உற்றகளு வாஞ்சிகளு தாவளை பழுகாமம்
நீதிசெறி தேத்தாவே னுஞ்செட்டி பாளையம்
நேராங் கிராங்குளம் புதுக்குடியி ருப்புச்
சோதிபெறு மகிளடித் தீவுமண் முனையூர்
சுற்றுமுறு முதலைக்கு டாவிலுறை பவளே.

16. உற்றுமே தாண்டவன் வெளியதனி லேவந்து
உவமைபெறு கொத்துக்கு ளந்திமிலை தீவு
வெற்றியுனை வந்தாறு மூலையீச் சந்தீவு
மேலான அங்கணா மைக்கடவை வெளியிலும்
எத்திசையிலும் வருட மிடபமது முன்வந்து
இயல்பான திங்கள்தனி லேமனமு வந்து
அத்தனருள் பெற்றுமே பூலோகந் தன்னிலே
அன்பான பாலமிர்த முண்டகண் ணகையே.

17. என்றுமே கொம்பினிட பாலமிர்த மேகொள்ள
ஒருகோடி பரிகலமு னைச்சூழ்ந்து வரவே
யென்றுமே கோதாரி யெங்களிட மணுகாமல்
இடிவிழுந் தோடவரு ளேகபரஞ் சோாதி
அன்றுமே கோவலர்க் கேமனைவி யாகி
அழியாத கன்னியா யரவினில மர்ந்தாய்
பண்டுமூ வுலகையும் பெற்றவளே தாயே
பாடினேன் பிழைபொறுத் தாளும்மம் பிகையே.

18. அம்பிகை வாழி அரியயன் வாழி
ஆனையுரி போர்த்தவர னாருமே வாழி
தும்பிமுக னுங்குகனு மேவாழ வாழி
சூட்சுமுறு கலைமகளு மேவாழ வாழி
அம்புவியி லேயுனைப் போற்றினோர் வாழி
அன்பாக வேபடித் தோருமே வாழி
கம்பைதிரு வொற்றிநகர் பட்டிநக ரெங்குமுறை
கண்ணகைதி ருப்பாதம் வாழ்கவா ழியதே.

குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள்

– முற்றிற்று –

சுபமங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வான்முகில் வழாது பெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க.
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி சாந்தி சாந்தி சாந்தி
சுபமங்களம்

குலதெய்வப் பாடல்கள்
– முற்றிற்று –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்க்கு"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கொப்ப இப்பாரினிலே மானிடராகப் பிறந்த நாம் பிறர் செய்த நன்றியை மறப்பது நன்றன்று. எனவே அடியேனுக்கு பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் புரிந்த மேன்மையுள்ள தம்பி பரதன் கந்தசாமி, அன்னவரின் துணைவியார் இருவருக்கும் நன்றி சொல்லுவதோடு, சிவத்தொண்டே பெரும் தொண்டு என அச் சேவையில் எனைச் சேர்த்து அறத்தொண்டனாக்கிய பெருமைக்குரியவர் சிவ ஸ்ரீ மு. நல்லதம்பிக் குருக்கள் அவர்களையும் அவரின் துணைவியார் திருவாட்டி தங்கநாயகி அம்மையார் அவர்களையும் என்னோடு அன்போடு இன்புறப் பழகிய சிவ ஸ்ரீ கு. நல்லராசாக் குருக்கள் அன்னவரையும் நண்பர் சிவாய நம திரு. ஜெ. ரவி என்பவர்களோடு இப்பணிக்கு ஊக்கப்படுத்தி ஒத்தாசை புரிந்த என் அன்பு மனைவியாள் ஈஸ்பரியானவளையும், அருமை மகன்மார், மருமக்களையும், மருமகன் வி. தேவசேனாதிபதியையும், கணேசவித்தியாலய அதிபர் திரு. கா. சந்திரலிங்கம், பி. பாலசுந்தரம், ஆசிரியர் வாமதேவன், த. லக்ஷ்மன், ஆ. கோடீஸ்வரன், கு. திருச்செல்வம், க. கேசுபதி (கவிஞர்) அக்கரை மாணிக்கம் ஆகிய அன்பர்களுக்கும் இப்புத்தக வெளியீட்டுக் குழுவினர்களையும், இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய வின்னர் விளையாட்டுக்குழுத் தலைவர் செல்வராஜ் அவர்கட்கும் 2003ம் ஆண்டு சித்திரை மாதம் அடியேனைக் கௌரவித்து நற்சான்றிதழ் வழங்கிய வின்னர் விளையாட்டுக்கழகத்தினரையும் சிரமம் பாராது பல புத்தக வெளியீடு கலை நிகழ்ச்சிகளுக்குப் பங்காற்றிய கிராம சேவை உத்தியோகத்தர்களான திரு. செ. அருள்ராஜ், சா. மனோகரன் ஆகியவர்களையும் வழமைபோல் எனது முந்திய வெளியீடுகளான பல புத்தகங்களை விநியோகித்து விற்பனை செய்து ஊக்கப்படுத்திய ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. பி. வேலாயுதபிள்ளை ஐயா அவர்களையும் மகன் செவ்வேள்குமரனையும், அடியேனின் கிராமியக்கலை முயற்சிக்கு உதவியளித்து கலாபூசண விருது வழங்கி கௌரவித்த இந்து சமயக் கலாசார பணிப்பாளர் திணைக்கள உத்தியோகத்தர்களையும் இக்கட்டத்தில் நினைவு கூறுகின்றேன்.

இப்புத்தகத்தை அழகுற அச்சிட்டு நிறை செய்து தந்த கோல்டன் அச்சக உரிமையாளர் திரு. ரீ. ஜீவா அவர்களையும் அவர்தன் மக்கள், மருமக்கள், உதவியாளர்கள், கணனி வடிவமைப்பு செய்த நௌபர் முகைடீன் அவர்களுக்கும் இப்புத்தகத்தை பிழை நீக்கிப் பாடுகின்ற தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– வணக்கம் –

இவ்வண்ணம்,

12.05.2006 நாகமணி விநாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா. விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

ஆக்க தொகுப்பு நூல்கள்:

| | |
|---|---|
| மாரியம்மன் குளுத்திப்பாடல் | 140.00 |
| கண்ணகை அம்மன் காவியப் பாடல் | 165.00 |
| நரசிங்க வைரவர் காவியம் கும்மிப் பாடல் | 130.00 |
| நவக்கிரக வழிபாடும் (பரிகாரங்களும்) | 185.00 |
| பேச்சியம்மன் காவியப் பாடல் | 155.00 |
| கடல் நாச்சியம்மன் காவியம் | 135.00 |
| நாகம்மை புகழ்மாலை | 140.00 |
| வயிரவர் காவியம் | 130.00 |
| முத்தான முருகன் தோத்திரப் பாடல்கள் | 185.00 |
| வைகுந்த மோட்சமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 110.00 |
| கழுகு மலைப்பத்து | 135.00 |
| கதிர்காம முருகன் வழிநடைக் கும்மி | 135.00 |
| குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் (ஆக்கம் தொகுப்பும்) | 350.00 |
| ஆதிமூல கெருடப்பத்து | 110.00 |
| காளியம்மன் காவியப் பாடல் | 175.00 |
| சித்தர் ஞான வாலைக் கும்மி | 185.00 |
| சிவமுத்து மணி மாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 175.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெறமுடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி, சேனைக்குடியிருப்பு–01B.
077-6538667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org